நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை

தோற்றம் - 14.09.1901

செந்தமிழ்

பகுதி: 11

தொகுதி: 112

திருவள்ளுவர் ஆண்டு 2049

திங்கள் இதழ்

விலை: ரூ.20

நவம்பர்- 2018

நான்காம் தமிழ்ச் சங்கம்-மதுரை 14.09.1901 THE FOURTH TAMIL SANGAM, MADURAI

நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

முகவை மன்னர் **நா.குமரன்சேதுபதி**	தலைவர்
மருத்துவர் **ந.சேதுராமன்**	துணைத் தலைவர்
வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி**	செயலாளர்
திருமதி.**இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி**	உறுப்பினர்
முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**	உறுப்பினர்
பொறிஞர் **க.சி.அகமுடைநம்பி**	உறுப்பினர்
திரு. **இரா.சண்முகசுந்தரம் I.R.S.,** (ஓய்வு)	உறுப்பினர்
வழக்குரைஞர் **கே.ஆர்.என்.கருணாகரன்**	உறுப்பினர்
திரு. **அழ.சித்தையா**	உறுப்பினர்
வழக்குரைஞர் **ச.தசரதராமன்**	உறுப்பினர்
திரு. **துரை கருணாநிதி**	உறுப்பினர்
திரு. **வி.சத்யநாராயணன்**	உறுப்பினர்

செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரி கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

வழக்குரைஞர் **ச.தசரதராமன்**	தலைவர்
திருமதி. **இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி**	செயலாளர்
வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி**	உறுப்பினர்
பொறிஞர் **க.சி.அகமுடைநம்பி**	உறுப்பினர்
திரு. **இரா.சண்முகசுந்தரம் I.R.S.,** (ஓய்வு)	உறுப்பினர்
திரு. **அழ.சித்தையா**	உறுப்பினர்
திரு. **வி.சத்யநாராயணன்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **து.மாயராசன்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **சு.சிவசாமி**	உறுப்பினர்
பொறிஞர் **லெ.சிவக்குமார்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **ஆர்.பாலாஜி**	உறுப்பினர்
திரு. **ஜெ.பாலதண்டாயுதம்**	உறுப்பினர்
முனைவர். **க.சந்திரசேகரன்** பல்கலைக்கழக நியமன	உறுப்பினர்
முனைவர். **கி.வேணுகா** முதல்வர் (பொ)	உறுப்பினர்
முனைவர். **கோ.சுப்புலெட்சுமி** துணை முதல்வர்	உறுப்பினர்
முனைவர். **பா.நேருஜி** உதவிப்பேராசிரியர்	உறுப்பினர்

பொருளடக்கம்

1.	**இதழ் மணம்**	4
2.	**சிலப்பதிகாரப் புதையல்கள் - இன்பத் துன்பு** - முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்** சென்ற இதழின் தொடர்ச்சி	8
3.	**நூற்றெட்டுத் திருப்பதி வண்ண விருத்தம்** - பேராசிரியர் **பெ.சுயம்பு**	13
4.	**பிரான்சில் திருக்குறளின் செல்வாக்கு** - பேராசிரியர் **ப.மருதநாயகம்**	17
5.	**வள்ளல் பாண்டித்துரைத் தேவர் உ.வே.சாமிநாதையரவர்களுக்கு எழுதிய கடிதங்கள்** - பேராசிரியர் **இ.சுந்தரமூர்த்தி**	22
6.	**சைவசித்தாந்தமும் திருமந்திரமும்** - முனைவர் **உ.கருப்பத்தேவன்** சென்ற இதழின் தொடர்ச்சி	28
7.	**குறிஞ்சிச் சிந்தனை** - புலவர் **சி.பாண்டுரங்கன்**	32
8.	**சங்க இலக்கியத்தில் வேங்கைப்புலி, வேழம், வேங்கைமரம்** - பேராசிரியர் **கசுத்தூரி இராமசாமி**	37
9.	**சங்கச் செய்திகள்**	39

வலைத்தளம்

www.maduraitamilsangam.com
www.senthamilcollege.com

மின்னஞ்சல்

secretarymaduraifourthtamilsangam@maduraitamilsangam.com
maduraitamilsangam@yahoo.co.in
principalsenthamilcollege@yahoo.co.in

இதழ்க்கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்	ரூ. 200	ரூ. 1,000
ஆயுள்கட்டணம்	ரூ. 3,000	ரூ. 10,000
புரவலர் கட்டணம்	ரூ. 10,000	ரூ. 20,000
தனி இதழ்க்கட்டணம்	ரூ. 20	

இதழ் மணம்

காப்பியம் மனித மனத்தைக் கனிவிப்பது; தன்னைத் தானே விரும்பும் மனம் தன்னைப்போல உலகத்து உயிர்களிடத்தில் இரக்கத்தைக் காண மனித மனத்தைக் கசிவிப்பது காப்பியம். உயிர்களின் துன்பத்தில் பங்கு கொண்டு தன்னை மறந்து இருப்பது இன்பத் துன்பியல். பேராசிரியர் இளங்குமரனாரின் துன்பியல் நாடகத்தின் இன்னொரு பகுதி உள்மனம் கசிந்துருகுவது; அதுவே இன்பத்துன்பியல். கற்பவனைக் கசிந்துருகச் செய்வது காப்பிய ஆசிரியன் படைப்பு. இளங்கோவடிகள் காப்பியத்தை எல்லா மக்களும் என்றும் படித்து மனம் நெகிழும் வண்ணம் உலக இலக்கியமாகப் படைத்திருப்பதைக் கட்டுரை ஆசிரியர் சின்னஞ்சிறு தொடர்களில் கூடக் காப்பிய ஆசிரியன் கற்பவன் உணர்வை, துன்பத்தைக் கண்டு ஏங்குகின்ற அன்பை வெளிக்கொணர்வது துன்ப இன்பியல் உத்தி.

நாடும் அரசும் எல்லோருக்கும் பொது; ஆட்சி அதிகாரம் உரிமை வாழ்வுக்குத் தடையாக இருக்க முடியாது. அதனால் கண்ணகி,

"குடையொடு கோல் வீழக்.. காண்பென்காண் !"

என உரிமை கேட்பதும்

"யானோ அரசன் யானே கள்வன்" என அரசன் நியாயத்தின் முன் எல்லோரும் ஓர் நிறை என்பதை உணர்த்துவதும், உலக இலக்கியமாகச் சிலப்பதிகாரம் கருதற்குரிய செவ்விலக்கியமாகத் திகழ்கிறது. செஞ்சொற்களாலான காப்பியத்தின் உள்ளீடு ஒவ்வொரு சொற்களிலும் புதைந்திருப்பதை ஆசிரியர் இளங்குமரனார் சிலப்பதிகாரப் புதையல் என எடுத்துரைக்கும் நுட்பம் கற்பவர் மனம் கொள்ளத்தக்கதாகும்.

பேராசிரியர் ப.மருதநாயகம் அவர்கள் திருக்குறள் ஐரோப்பா கண்டத்தில் பிரான்சில் அறிஞர் பிரான்சுவாகுரோ என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டு ஆங்கில மொழியிலும் பிறநாட்டு நல்லறிஞர்களின் சிந்தனையிலும் இடம் பெற்றிருப்பதை எடுத்துரைக்கும் நுட்பம் ஒரு அரிய முயற்சியாகும். நம்நாட்டில் திருக்குறள் படிப்பவர்களின் பார்வையும் மேலைநாட்டு அறிஞர்களின் பார்வையும் எவ்வாறு வேறுபட்டுள்ளது என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

இந்திய நாட்டுக் கல்வியாளர்கள் சாதி, சமயச் சடங்குகளைத் திருக்குறளில் ஏற்றிப் பார்த்து மகிழ்கிறார்கள்.

தமிழ் மரபை நன்கு அறிந்த மேலைநாட்டு அறிஞர் ஐந்திணை மரபைத் திருவள்ளுவர் எடுத்தாண்டுள்ள சிறப்பை உலகுக்கு உணர்த்தும் சிறப்பு எண்ணிஇன்புறத்தக்கது. திருவள்ளுவரின் காமத்துப்பால் உலகமக்கள் அனைவருக்கும் பொதுவானது என்பதையும் ஐந்திணை மரபு குறித்தும் ஆசிரியர் குறிப்பிட்டுள்ள செய்தி எப்போதும் நம் சிந்தனையில் இருக்க வேண்டிய செய்தியாகும்.

“திருவள்ளுவர் ஐந்திணை மரபைப் புறக்கணிக்காது, அதன் இன்றியமையாக் கூறினுக்குச் சிறப்புரிமை அளித்து, வட்டார அடையாளங்களையெல்லாம் **பிரபஞ்சப் படிமங்களாக** மாற்றும் சாதனையை வெற்றியோடு நிகழ்த்தியுள்ளார் என்பது குரோவின் தெளிவான முடிவும் பாராட்டுமாகும்.”

திருவள்ளுவர் இப்பிரபஞ்சத்திற்குச் சொந்தக்காரர் என்பதும் வேற்றுமையற்ற ஒருமை உணர்வு தமிழ்மரபு என்பதையும் மற்றும் சங்க இலக்கியத்திலும் திருக்குறளிலும் ஊடுருவி நிற்கின்ற உலகு தழுவிய உண்மைகளையும் திருக்குறள் நிலைத்து நின்று கருத்துக்களால் காலத்தை வென்று வழிவழியாக மக்கள் வாழ்க்கையிலும் சிந்தனையிலும் இடம் பிடித்து வாழ்வதை ஆசிரியர் எடுத்துரைக்கும் திறம் சிந்திக்கத் தக்கது.

பேராசிரியர் பெ.சுயம்பு அவர்கள் ஓய்வுபெற்ற பின்பு சென்னையில் உள்ள உ.வே.சா.நூல் நிலையத்தின் காப்பாட்சியராக பணியாற்றினார்கள். தொடர்ந்து தமிழ் இலக்கிய இலக்கணச் சிந்தனையோடும் கற்றல் எழுதுதல் ஆகிய பணிகளை இடைவிடாது நிகழ்த்தி வருகிறார்கள். அண்மையில் உ.வே.சா. நூல் நிலையத்தில் இருந்த **“நூற்றெட்டுத் திருப்பதி வண்ண விருத்தம்”** என்னும் ஏட்டை தூசிதட்டி அதற்குச் சிறந்த முன்னுரையும் உரையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

நூலாசிரியரும் உரைஆசிரியரும் தமிழ் இலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்கவர்கள். நூலாசிரியர் திருவாய்மொழி ஆசிரியர் நம்மாழ்வாரை “மெய்ப்பொருள் என்னும் மனத்தவா” என்று

விளிப்பதிலிருந்து நூலாசிரியர் உள்ளக் கிடக்கையை நாம் உணரமுடிகிறது. மெய்ப்பொருள் சிந்தனையாளருடைய கவிதையை அச்சில் கொண்டுவந்து தமிழ் நூல் நிலையத்திற்குப் பழைய ஏட்டுச்சுவடியை நூல்வடிவமும் உரையும் தந்து புதிய நூலை அறிமுகம் செய்ததற்கு தமிழ் வாசகர்களின் பாராட்டு என்றும் உண்டு.

பேராசிரியர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள் வள்ளல் பாண்டித்துரைத்தேவர் உ.வே.சாவுக்கு எழுதிய கடிதங்களை ஆய்வு செய்து ஒரு கட்டுரை எழுதியுள்ளார்.

சான்றோர் நெஞ்சில் இடம் பெறுவதும் அவர் வாய்ச்சொல் கேட்டு இன்புறுவதும் தவத்தின்பாலதாகும். பாண்டித்துரைத்தேவரும், பாசுகரசேதுபதியும், ஊற்றுக்குழி அரசர் ஊர்காவலத்தேவரும் தவமுடைய பெருமக்கள். தங்கள் வாழ்வு அரச வாழ்வாக அமைந்தபோதினும் அதனினும் மேலாக நற்பொருளைச் சிந்திக்கின்ற கல்வியாளர் கூட்டத்தோடு எப்போதும் தொடர்புகொண்டு வாழ்கின்ற பேறுபெற்றவர்கள்.

"கும்பமுனி எனத்தோன்றும் சாமிநாதப்புலவன், குடந்தைநகர் கலைஞர்கோ" என்று பாரதி கொண்டாடும் சான்றோர் உ.வே.சா. அப்பெரியார், சங்கம் வைத்து மொழி வளர்த்த கல்வியாளராகிய பாண்டித்துரையைப் போற்றும் சொற்கள் கற்று இன்புறத்தக்கது.

"தமிழ்ப் புவி செய்தவமெனவும்
தயங்கு மேன்மைக்குலம்பிறங்கு
தவமெனவும் குணம் பிறங்கு
தவமெனவும் குலவுமேலோன்"

எனப் பாண்டித்துரைத்தேவரைப் பாராட்டும் செய்தி நெஞ்சம் கொள்ளத்தக்கது. இன்னொரு செய்தி உவேசா பல்வேறு கடிதங்கள் பலருக்கும் எழுதியுள்ளார். ஆனால் அவருடைய கடிதங்களை யாரும் பாதுகாக்கவில்லை. அவர் எழுதிய மடல் காலவெள்ளத்தில் மறைந்தன. ஆனால் அவர் பாதுகாத்து வைத்த கடிதங்களின் வாயிலாகவே நமக்கு உவேசா மற்றவர்களுடன் கொண்ட தொடர்பு தெரிகிறது.

ஆம்பூரிலிருந்து புலவர் சி.பாண்டுரங்கன் குறிஞ்சி குறித்த சங்க இலக்கிய செய்திகளைச் சிரத்தையுடன் முயன்று தொகுத்து வழங்கியுள்ளார். ஆசிரியர்களுக்குப் பாடம் சொல்வதற்கே நேரம் சரியாக இருக்கும். கட்டுரை எழுதும் முயற்சி அரிது. புலவர் சி.பாண்டுரங்கன் செந்தமிழ் இதழைத் தொடர்ந்து படித்து மகிழும் இயல்புடையவர். கட்டுரைகளைப் பாராட்டி அஞ்சல் எழுதுவார். செவ்விலக்கியத்தின் அருமையை அவருடைய பார்வையில் கண்டு இன்புறலாம்.

பேராசிரியர் கசுத்தூரி இராமசாமி அவர்கள் பணிநிறைவு பெற்ற பயிரியல் துறைப் பேராசிரியர். அவர்கள் கட்டுரை சங்க இலக்கியத்தில் பொதிந்துள்ள இயற்கைக் காட்சிகளை சொல்லோவியமாகத் தீட்டி இன்புறுத்துகின்றது. இக்கட்டுரையில் புலியும் வேழமும் காட்டில் நிகழ்த்தும் போர்க்காட்சிகளை மனத்திரையில் கொண்டு வந்து இலக்கிய இன்பம் படைத்துள்ளார்.

"ஊர்க்குறுமாக்கள் வெண்கோடு கழாலின்
நீர்த்துறைப் படியும் பெருங்களிறுபோல
இனியை பெரும எமக்கே"

என்னும் ஔவையின் புறநானூற்று கவிதையுடன் பேரிசாத்தனாரின் நற்றிணைப் பாடல்,

"துறுகல் மீமிசை உறுகண் அஞ்சாக்,
குறக்குறு மாக்கள் புகற்சியின எறிந்த,
தொண்டகச் சிறுபறைப் பாணி." என்னும்

கவிதை,

"குன்றேறி யானைப்போர் கண்டற்றால், தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை"

என்னும் திருக்குறளோடு ஒப்பிடும்போது குறக்குறுமாக்கள் வாழ்க்கை இயற்கையோடு இயைந்தது. தொண்டகச்சிறுபறைப்பாணி குறிஞ்சிப் பறையாகும். மக்கள் பண்டை நாட்களில் இயற்கையோடு இயைந்து பாடலும் இசையும் கூத்தும் நிறைந்த இனிய வாழ்க்கையின் வெளிப்பாடாக சங்க இலக்கியம் அமைந்திருப்பதை பேராசிரியர் கசுத்தூரி இராமசாமி அரிதின் முயன்று கற்பவர்களுக்கு அறிவியல் செய்தியோடு சங்க இலக்கியத்தைப் பகிர்ந்து கொள்வது கத்தூரி கமழ் சாந்து போல மணம் பரப்புகிறது.

சிலப்பதிகாரப் புதையல்கள்

15 இன்பத் துன்பு

சென்ற இதழின் தொடர்ச்சி - முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**

வையையை அடைகின்றனர். வையையோ,

"தையற் குறுவது தானறிந் தனள்போல்
புண்ணிய நறுமலர் ஆடை போர்த்துக்
கண்ணிறை நெடுநீர் கரந்தன ளாகிப்
புனல்யா றன்றிது பூம்புனல் யாறென"க்

காட்சி தருகிறது (13: 171-174) மேலும்,

"தையலும் கணவனும் தனித்துறு துயரம்
ஐயமின்றி அறிந்தன போலப்
பண்ணீர் வண்டு பரிந்தினைந் தேங்கிக்
கண்ணீர் கொண்டு காலுற நடுங்கப்
போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி
'வாரல்' என்பனபோல் மறித்துக் கைகாட்ட...
அறம்புரி மாந்த ரன்றிச் சேராப்
புறஞ்சேரி மூதூர் புக்கனர்"

என்கிறது (185-190; 195-196)

1) தென்னவன் நாட்டில் எவற்றின் தீமை இல்லை என்றாரோ அவையே வருந்தச் செய்தலைச் சுட்டுகிறார்.

2) பாதுகாப்பான இடத்தை நலஞ்சேர் சிறப்பு என்னாமல் தீதுதீர் சிறப்பு என்கிறார்.

3) தகைக்குநர் - தடுப்பார்; தடுப்பார் இல்லையாம்.

4) கண்ணகிக்கு வருந்துயர்க்குக் கண்ணீர்ப் பெருக்காகக் காட்டாமல் பூவாடையால் போர்த்துச் செல்கிறதாம்.

5) கண்ணகிக்கும் கோவலனுக்கும் வருவதைத் தெளிவாக அறிந்தவை போல வண்டு இரங்கல் இசைத்து வருந்துகிறதாம்.

6) கோட்டைமேல் உள்ள கொடி வாராதே என்று தடுப்பதுபோல் அசைந்தாடுகின்றதாம்.

7) புறஞ்சேரி இல்லறத்தார் தங்குதற்கு ஆகாத துறவர் உறைவிடமாம்.
காண்பவை எல்லாம் அவலக் கவலைகளைக் குறிப்பாக உணர்த்துவனவாகவே காட்டுகின்றார் அடிகள்.

இரவு புறஞ்சேரியில் தங்கி மதுரையில் தம் தந்தையின் நண்பர் எவரையேனும் அறியுமாறு விடியலில் புறப்படும் கோவலன் "உம் காலடிக் காப்பில் இவள் இருப்பதால் 'ஏதம் உண்டோ?'' என்கிறான்! 'இல்லை' என்பது அவன் எண்ணம்!

அந்நிலையில் கவலைப்படேல் எனாமல் வினையைப்பற்றி 37 அடிகள் கூறிப், "பொருந்துழி அறிந்து போதீங்கு" என்கிறார்.

வினைவிடாது என்பதை இராமன், தருமன், நளன் கதைகளையெல்லாம் கூறுகிறார்.

புறஞ்சேரி வந்த மாடல மறையோன் கோவலன் நலங்களைக் கூறிப் பாராட்டுமளவில் கோவலன், "மதுரையில் கண்ணகி நடுங்குதுயரெய்தவும், தான் உடையிழந்து எருமைமேல் ஏறி ஊரவும், மணிமேகலையை மாதவி போதி அறவனிடம் ஒப்படைக்கவும் நனவு போல நள்ளிருள் யாமத்துக் கனவு கண்டதாகக் கூறினான்; அது விரைவில் எய்தும்'' என்றான். உடனே, கவுந்தியும் மாடலனும்,

"அறத்துறை மாக்கட் கல்லது இந்தப்
புறச்சிறை இருக்கை பொருந்தாது"

"ஆதலால் மாலையாவதன் முன் மதுரை புகுக" என ஏவுகின்றனர். அப்பொழுதில் அவண் வந்தார் மாதரி! அவர் அடைக்கலமாக ஒப்படைக்கிறார் கவுந்தி.

"மாதரி தன்னுடன் மடந்தையை இருத்துதற்கு
ஏதம் இன்று''

என்று ஒப்படைக்கிறார்.

ஏதம் இன்று வரும் தீங்கு யாதும் இல்லை; நன்மை யுண்டு என்னாமல் தீமை இல்லை என்றே நினைக்கிறார்.

"நீட்டித் திராது நீ போ''

என்று மாதரிக்குக் கட்டளையிடுகிறார் (15:199)

"ஏதம் இல்லா இடந்தலைப் படுத்தினள்
நோதக வுண்டோ நும்மக னார்க்கினி'' (16:16-17)

என்றே மாதரி அழைத்து வருகிறாள்.

சிலம்பு பெற்றவன்,

"மாறி வருவன் மயங்கா தொழிக" (16:93)

என விடை பெறுகிறான்! மாறிவருதல் என்பது 'விற்றுவருவேன்' என்னும் பொருளதே எனினும் குறிப்பு வேறு காட்டலும் அறியலாம்.

கோவலன் புறப்பட்டு வர இமில் ஏறு எதிர்த்துச் சென்றது. ஏறு எதிர்தல் இடையர் அறியும் நிமித்தமாதலின் (கோவலன்) அறிந்திலன் என்கிறார் அரும்பத உரையாசிரியர். நிமித்தமாவது வருவதை அறிவிக்கும் முற்குறி.

பொற்கொல்லனைக் கண்ட கோவலன்,

"காவலன் தேவிக் காவதோர் காற்கணி
நீவிலை யிடுதற்கு ஆதியோ" (16:111-112)

என வினாவ அவனோ,

"அடியேன் அறியேன் ஆயினும் வேந்தர்
முடிமுதல் கலன்கள் சமைப்பேன் யான்"

என்கிறான் (16: 113-114). அவனைக் "கூற்றத் தூதன்" என்கிறார் அடிகள் (16:115).

கன்னமிடாமலே சிலம்பைக் களவாடிய கள்வன் என் சிறுகுடிலின்கண் உள்ளான் என்று காவலனிடம் உரைத்தான் பொற்கொல்லன்.

காவலன், ஊர்காப்பாளரைக்கூவி,

"தாழ்பூங் கோதை தன்காற் சிலம்பு
கன்றிய கள்வன் கையதாகிற்
கொன்றச் சிலம்பு கொணர்க"

என ஆணையிடுகிறான். (16:151-153). இதனைக் கூறும் அடிகள்,

"வினைவிளை காலம் ஆதலின் யாவதும்
சினையலர் வேம்பன் தேரான் ஆகி"

ஆணையிட்டான் என்கிறார்.

கோவலனை,

"தீவினை முதிர்வலைச் சென்றுபட் டிருந்த
கோவலன்"

என்கிறார் (16: 156-157)

"காவலன் செங்கோல் வளைஇய வீழ்ந்தனன்

கோவலன் பண்டை ஊழ்வினை உருத்தென்"

எனக் கோவலன் முடிவை நிறைக்கிறார் அடிகள் (16: 216-217)

கோவலனோடு கதை முடிந்துவிடாதே! இன்னும் தொடர்ச்சி உண்டே!

மாதரி, அன்று அரண்மனைக்கு முறைப்படி நெய்வழங்க வேண்டிய நாள். விடிந்து பார்த்தால்,

"குடப்பால் உறைய வில்லை"

"காளைகள் கண்ணீர் சொரிகின்றன"

ஆதலால் ஏதோ விளைய உள்ளது என அறிந்தாள். ஆதலால் ஆயர்பாடியில் எருமன்றத்து மாயவனுடன் தம்முன் ஆடிய வாலசரிதை நாடகங்களில் வேல்நெடுங்கண் பிஞ்ஞையோடாடிய குரவையாடுதும் யாம் என்றாள். கண்ணகி முன்னாக ஆய்ச்சியர் குரவை நிகழ்ந்தது.

குரவை முடிவில் ஊரில் ஓர் அவலச் சொல் கேட்டது.

"காதலற் காண்கிலேன் கலங்கிநோய் கைம்மிகும்"

என்பது முதலாகக் கண்ணகி அல்லலுற்று ஆற்றாத் துயருற்றாள், ஊரைச் சுற்றிச் சுற்றி உரைத்து உழன்றாள்.

காலை வாய்த் தழுவினாள் மாலைவாய்க் கண்டாள் (19:36-37)

அவன் காணாக் கடுந்துயரம்! கோவலன் வாய் 'இருந்தைக்க', (இருப்பாயாக) என்று கூறிப் பிரிந்தது உயிர். கண்ணகி,

நின்றாள் நினைந்தாள் நெடுங்கயற்கண் நீர்துடையாச்

சென்றாள் அரசன் செழுங்கோயில் வாயில்முன்! (19:74-75)

வழக்குரை காதை தொடங்கும்போதே,

"குடையொடு கோல்வீழக்... 'காண்பெண்காண்!"

என்று கண்ணகி சொல்வதாகச் சொல்லும் அடிகள்,

காதை இறுதியில்,

"தாழ்ந்த குடையன் தளர்ந்த செங்கோலன்"

என்று அவனையே சொல்ல வைக்கிறார்.

"யானோ அரசன் யானே கள்வன்"

என்று கூறி அவன் வீழவும்,

"கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்லென்று

இணையடி தொழுது வீழ்ந்தனளே மடமொழி"

என்று தேவி வீழ்ச்சி சொல்லவும் வைக்கிறார்!

கோவலன் வீழப் பத்தொன்பது காதைகள் பாடிய அடிகள்,

காவலன் வீழ ஒரே ஒரு காதையை எடுத்துக் கொள்கிறார்.

பாண்டிமாதேவி வீழ்வதுபோல வீழாமல் கண்ணகி மேலெழ

மூன்று காதைகளை எடுத்துக் கொள்கிறார்.

"தீத்தொழிலாட்டியேன்' என்று கண்ணகி சொல்லிப்

பதினான்கு நாள்கள் நடந்து நெடுவேள் குன்றமேறி

வானவூர்தி யேறலோடு நிறைக்கிறார்!

மதுரைக் காண்டம் முடிந்து, கண்ணகி தெய்வநிலை எய்துதல் வஞ்சிக் காண்டமாக மலர்ந்து வரந்தரலோடு நிறைகிறது.

கோட்டம் எடுத்துச்

சிலையை நிறுவிக் 'கடவுண் மங்கலம்' செய்யப்படுகிறது.

மின்னுக் கொடி ஒன்று விண்ணில் பளிச்சிடுகின்றது.

"தென்னவன் தீதிலன்... நானவன் தன் மகள்"

"வென்வேலான் குன்றில் விளையாட்டு யானகலேன்"

எனக் கண்ணகியார் உருவிலி ஒலி கேட்கின்றது!

முரண்களையே அடுக்கி வந்து அவலக் காப்பியத்தை அரிமா நோக்கில் திருப்பி

அரண்களையே பதித்துக் கண்ணகி வாக்காகவே,

"எங்கோ மடந்தையும் ஏத்தினாள் நீடூழி

செங்குட்டுவன் வாழ்க என்று"

மங்கலக் காவியமாக முடிக்கிறார்!

இதனை முரண் அரண் என்பதா, அரண் முரண் என்பதா? அல்லது துன்பியல் என்பதா, இன்பியல் என்பதா? அல்லது இன்பத் துன்பியல் என்பதா?

நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரமாக நமக்கு வாய்த்தமையால் இன்பத் துன்பியல் எனலாம்!

மகப்பேற்றுப்பாடு மகமுகம் கண்டதும், தாய்முகம்

தண்ணிய முழுமதியாக மலர்வது கண்கூடு அல்லவா!

நூற்றெட்டுத் திருப்பதி வண்ண விருத்தம்

பேராசிரியர் **பெ.சுயம்பு,**
மேனாள் பேராசிரியர்,
ஆதித்தனார் கல்லூரி,
திருச்செந்தூர்.
கைபேசி : 9486379688

வண்ணவிருத்தம் எனும் சிற்றிலக்கிய வகையைச் சார்ந்தது இது. இவ்விலக்கியம் டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்களால் ஆழ்வார் திருநகரி எனும் திருக்குருகாபுரித் திருப்பதியில் பெறப்பெற்ற ஓலைச்சுவடி. சென்னைப் பெசண்ட் நகரிலுள்ள மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையத்தில் பேணப்பெற்று வருகிற இச்சுவடி இலக்கியம், இப்போது (2018 செப்டம்பரில்) தாளில் அச்சேற்றப்பெற்று நூலாக்கி வெளியிடப்பெற்றுளது. இந்நூலைப் பற்றிய அறிமுகக் கட்டுரையே இது.

நூல் அமைப்பு

சுவடி நூலில் திருப்பதியின் பெயர் தலைப்பாகவும் அதன்கீழ் அப்பதி குறித்த வண்ணவிருத்தம் எனும் செய்யுளாகவும் மட்டுமே செய்திகள் காணப்படுகின்றன. இலக்கியச் சிறப்புக்கள் பலவற்றைக் கொண்ட இந்நூலுக்கு இக்கட்டுரையின் ஆசிரியர் உரைவிளக்கம் எழுதியுள்ளார். அச்சிடப்பெற்றுள்ள நூல் செய்யுள், உரை எனும் அளவில் அமைக்கப்பெற்றுளது. அருஞ்சொற் பொருளகராதி இணைக்கப்பெற்றுளது.

நூலாசிரியர் சிறந்த வைணவப் பக்தர் என்பதன்றி, அவரது பெயரோ ஊர் உறவு பற்றிய குறிப்போ நூலுள் அறியப்படவில்லை. வைணவச் சான்றோரான நம்மாழ்வார் இடத்து ஆழமான பக்தியை ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார். நம்மாழ்வாரைப் போற்றி வாழ்த்துதல் என்பது பெருமாளுக்கு அடுத்த சிறப்பிடம் அவருக்கானது எனும் வைணவர் மரபு எனலாம். அல்லது நம்மாழ்வாரின் திருவவதாரத் திருப்பதி எனும் ஆழ்வார்திருநகரியில் இந்நூலாசிரியரும் வாழ்ந்தார் எனவும் கொள்ளலாம்.

நூல் சடகோபதேசிகன் எனப் போற்றப் பெறுகிற நம்மாழ்வார் வணக்கத்துடன் தொடங்குகிறது.

பொருப்பி னிற்பொலி வுண்ணு புயத்தரா
வணைக்குள் மெய்த்துயில் பண்ணு மெனத்தனார்
புனக்க டக்கரி சொன்ன விரைத்துழாய் - நெடுமாமால்
திருப்ப திக்கொரு வண்ண விருத்தமே
விழுப்ப றச்சொல மன்னி வழுத்தவோர்
சிறப்பு டைத்தமி ழென்னி தயத்துநீ - யருள்வாயே
மருப்பு ளிப்படர் துன்னு நிழற்குளே
யிருக்கு மெய்ப்பொரு ளெண்ணு மனத்தவா
மகிழ்த்தொ டைக்கழ கென்ன வுதித்துவாழ் - குருகூரா
விருப்பு றக்கதி யெம்மை யளித்தவா
செகத்தி னிற்புகழ் செம்மை செழித்தவா
விசைக்க ளிச்சிறை யன்ன நடத்துமோர் - பெருமானே. (1)

திருக்குருகூரில் அருள்கிறவனே! உறங்காப்புளியமரத்து நிழலில் மெய்ப்பொருளாம் மறைநாயகனைச் சிந்தித்துக் கொண்டிருப்பனே! மகிழம்பூ மாலை அணிந்த நம்மாழ்வாரே! பாம்பணைமீது அறிதுயில் கொள்ளும் என் தலைவனும் கசேந்திரன் எனும் யானைக்கு அருளியவனும் ஆகிய நெடிய திருமால் உறைந்து அருள்கிற திருப்பதிகளை வாழ்த்தி வண்ண விருத்தம் பாடுதற்கு அருள்செய்வீராக.

இரண்டாம் பாடலும் நம்மாழ்வாரை வணங்கி வரம் வேண்டுவதாக உளது. அதில்,

....

வெந்திறற் களியானை கூறிய
யெந்தையைப் பரிவாக நீசொலும்
விஞ்சையைத் தமியேனு மோதிட - வருள்வாயே

....

செந்தமிழ்க் கவிவாணர் நாயக
தொண்டருக் கருள்காரி பாலக
செண்பகச் சடகோப தேசிகா - பெருமானே (2)

எனும் அடிகள், நம்மாழ்வாரின் பெருமானைப் பாடும் கவிதை வல்லமையினையும் 'நினது தொண்டனாகிய எனக்கும் அருள்புரிதல் நின் கடனே' என்று உரிமையுடன் வேண்டுதலையும் புலப்படுத்துகின்றன.

நம்மாழ்வாரைத் தொடர்ந்து பட்டர்பிரான், சடகோப ஆரியன், பெரியநம்பி, கருடாழ்வார், மணவாள மாமுனிகளை வாழ்த்தி வணங்கும் ஒவ்வொரு பாடல் இடம்பெற்றுளது.

நூலின் முற்பகுதி சோழ மண்டலத் திருப்பதிகள் பற்றியவை. திருவரங்கம் வைணவர்களின் கோயில் என்று போற்றப்படுதலால், முதற்கண் இடம்பெற்றுளது. சோழமண்டலத்தில் 43 திருப்பதிகள் 45 கவிகளால் பாடப்பெற்றுள்ளன. தொடர்வது பாண்டிமண்டலம். அதில் திருமாலிருஞ்சோலை முதற்பதி. இம்மண்டலத்துள்ள 18 திருப்பதிகளும் 24 கவிகளால் போற்றப்பெறுகின்றன. மலைநாட்டு மண்டலத்துள்ள 13 திருப்பதிகளும் 14 கவிகளால் பேசப்பெறுகின்றன. திருவனந்தபுரத்திற்கு முதலிடம். தொண்டைமண்டலத்தில் அயிந்திரபுரம் முதலாக 24 திருப்பதிகள் 25 பாடல்கள் உள்ளன. நிறைவாக வடவெல்லையில் திருவேங்கடம் முதல் திருப்பதி; இந்நாளில் திருப்பதி எனச் சிறப்பாகப் பேசப்படுவது. திருவைகுந்தத்தில் இம்மண்டலம் நிறைவுறுகிறது. இங்கு 14 திருப்பதிகள்; 16 கவிகள்.

நூல் மண்ணுலகச் சொர்க்கத்தில் தொடங்கி விண்ணுலகச் சொர்க்கத்தில் நிறைவுறுகிறது. இந்நூலைப் பக்தியுடன் துய்த்தோர் இம்மையிலும் மறுமையிலும் சிறப்புக்களை எய்துவர் என்பதனை நூலாசிரியர் நூலின் அமைப்பில் உணர்த்தியுள்ளார்.

ஒவ்வொரு மண்டலத்தின் தொடக்கப்பாடலாகச் செந்தமிழ்க் கவிவாணர் - பரமதேசிகன் - கலகசட்சமயவரை மோதிய அறிவாளன் - புகழ்பெருகு நாவலர் நம்மாழ்வாரை வணங்கி வரம் வேண்டும் பாடல் இடம்பெற்றுளது.

பாடல் ஒவ்வொன்றும் இருபகுதிகளைக் கொண்டது. தலைவனாகிய பெருமாளின் வல்லமை, அடியார்க்கு இரங்கி ஆதரிக்கும் பேரருள், அவர் எழுந்தருளியுள்ள திருப்பதி பற்றிய விளக்கம் ஆகியன ஒரு பகுதியில் அடக்கம். தலைவி படுகிற காதல் துயரம், அத்துயரத்தை மிகுதிப்படுத்துகிற காமனின் கணைப் பாய்ச்சல், தென்றல், நிலவொளி, இரவு, தனிமை, பெற்ற தாயின் ஏச்சுரை, சுற்றம் சூழலாரின் பழிப்புரை போன்ற காரணிகளின் விளக்கத்தைக் கொண்டது மறுபகுதி.

அகத்திணை இலக்கியம்

தமிழ் அகத்திணை இலக்கியங்கள் கற்பனை மாந்தர்களைக் கொண்டது. தலைவன், தலைவி, தோழி, தோழன், செவிலி என மாந்தர்கள் உருவாக்கப்பெற்று, அவர்களின் தனிமொழிக் கூற்றுக்களின்

வழிக் காதல் உணர்வுகளும் நிகழ்வுகளும் வெளிப்படுத்தப்படுதல் உண்டு. இங்கு வருகிற கதைத்தலைவர்களின் இயற்பெயரோ ஊர் முதலிய அடையாளங்களோ சுட்டிக் கூறப்பெறுதல் இல்லை. அவ்வாறே பிற மாந்தர்களதும்.

மனித வாழ்க்கையில் ஏற்றுக் கொள்ளப்பெற்ற இக்கற்பனைக் காதல் ஒழுக்கத்தினை இறை நம்பிக்கையுள்ள புலவர்கள் தம் பக்தி வெளிப்பாட்டிற்கும் உரியதாக்கிக் கொண்டனர். சிற்றின்ப வேட்கை பக்தியில் பேரின்பத்தை அடையும் தகுந்த சரியான உயரிய நெறியாகவும் கொள்ளப்பெற்றது. இறைவாழ்வில் களவொழுக்கமாகிய காதல் ஒருதலை - கைக்கிளையாக ஆனது. இறைவனைத் தலைவனாகவும் ஆன்மாவைத் தலைவியாகவும் தெய்வப் புலவர்கள் கருதிக்கொண்டு பாடினர். இது ஒரு புதிய நெறி அன்று. பழந்தமிழர்களுக்கே உரிய சொந்த இலக்கிய முறைகளை முறைப்பட ஆராய்ந்து தெளிந்து புலங்களை எல்லாம் செம்மையாகத் தொகுத்து வழங்கிய தொல்காப்பியத்திற்கும் முந்திய காலங்களில் நிலவிய ஒரு பெரிய தொன்னெறி மரபாகும்.

சமயக் காதல் இலக்கியங்களின் தலைவனது இயற்பெயர், ஊர் முதலான அடையாளங்கள் வெளிப்படுத்தப் பட்டிருக்கும்.

நூற்றெட்டுத் திருப்பதி வண்ணவிருத்தம் ஒரு கைக்கிளை அக இலக்கியம். திருமாலாகிய பெருமாளே கதைத் தலைவன். விருத்தம் பாடிய புலவர் அல்லது அவரது ஆன்மாவோ இவ்விருத்தத்தைத் துய்க்கும் ஏழை அன்பர்களின் ஆன்மாவோ கதைத் தலைவி. தலைவியின் புலம்பலாகவே பாடல்கள் பேரளவில் உள்ளன. தோழியர், நற்றாய், செவிலி எனும் மாந்தர்கள் பற்றிய குறிப்பையும் பாடல்களில் காணலாம். இவ்விலக்கியத்தைப் பாடிய புலவர் தமது இழிநிலையையும் இயலாமையினையும் கூறி, தம்மைத் தடுத்தாட் கொண்டு பரமபதத்தில் சேர்த்துக் கொண்டு அருளுமாறு கதறுகிற கவிக்கூற்றுப் பாடல்களும் ஆங்காங்கே இடம்பெற்றுள்ளன.

தொடர்ச்சி அடுத்த இதழில்

"தண்டமிழ்ச் சங்கந் தன்னைமுன் னிறீஇ
பண்டுபல் புலவரை வம்மென வேற்றுக்
கொண்டுநற் றாற்றுங் குணப்பெருங் குன்றே
வேண்டிற் றெவர்க்கும் விரைந்தினி துதவும்
பாண்டித் துரையெனும் பாவலர் கோவே!"
(எம்.கே.எம்.அ.)

பிரான்சில் திருக்குறளின் செல்வாக்கு

பேராசிரியர் **ப.மருதநாயகம்**
ஆய்வறிஞர்,
நடுவண் அரசு செவ்வியல் தமிழ் நிறுவனம்,
தரமணி, சென்னை - 600 113.
கைபேசி: 94427 87727

பிரான்சில் திருக்குறள் பெற்றுள்ள செல்வாக்கைக் குறித்து, பிரான்சுவா குரோ (Francois Gros) என்னும் பிரெஞ்சு அறிஞர் எழுதியுள்ள இரண்டு கட்டுரைகளால் அறியலாம். இவற்றுள் ஒன்று "Introducing Tiruvaḷḷuvar : the Book of Love" என்னும் தலைப்பைக் கொண்டது; அவர் காமத்துப்பாலை மட்டும் பிரெஞ்சில் மொழிபெயர்த்து அதற்கு இக்கட்டுரையை முன்னுரையாக எழுதியுள்ளார். இன்னொரு கட்டுரையின் தலைப்பு "Five times five is twenty five : around the commentaries on the book of love of Tiruvaḷḷuvar." இது பாரிஸ் பல்கலைக்கழகம் ஒன்றில் நிகழ்ந்த கருத்தரங்கில் வழங்கப்பெற்ற கட்டுரை. இரண்டும் அவரால் பிரெஞ்சு மொழியில் எழுதப்பட்டவை. அவற்றின் ஆங்கில மொழிபெயர்ப்புகள், **Deep Rivers: Selected Writings on Tamil Literature** என்னும் தலைப்பைக் கொண்ட நூலில் இடம் பெற்றுள்ளன. அக்கட்டுரைகளில் அவர் சொல்லும் முடிவுகள் பல நாம் அறிந்திருக்கவேண்டியவை.

1

திருக்குறளில் முதலிரண்டு பகுதிகளாகிய அறத்துப்பாலும் பொருட்பாலும் கிறித்துவ சமயத்துறவிகளைப் பெரிதும் கவர்ந்தன. மூன்றாம் பகுதியாகிய காமத்துப்பால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் சில படைப்பிலக்கியக்காரர்களை ஈர்த்தது. குறட்பாக்களின் சிறப்பை,

> Brief and dense, each Kuraḷ, or short couplet, is a multi - faceted diamond; in Tamil terms, it is dewdrop on the blade of millet which reflects the towering palm tree, the hollowed out mustard seed which encloses the seven seas, or the atom which contains the whole universe (ப.125)

(தினைத்தாளின் மேலுள்ள பனித்துளி பெரும்பனையைப் பிரதிபலிப்பது போன்று; ஏழ்கடலைப் புகட்டிய கடுகு போன்று; ஏழ்கடலைப் புகட்டிய

அணுபோன்று) என்று திருவள்ளுவ மாலைப் பாடல்களைக் கொண்டு எடுத்துரைக்கும் குரோ, ஒவ்வொரு குறளும் அது கூறும் பொருளை முழுமையாக உள்ளடக்கியிருக்கும் குறும்பா என்று விளக்குவார்.

திருக்குறள் செவ்வியல் தன்மை கொண்டது, சமயம் சாராதது, எளிதில் நினைவில் நிறுத்திக் கொள்ளக்கூடியது. அதன் காலத்தைச்சேர்ந்த மற்ற பழம்நூல்கள் பல மறக்கப்பட்டிருப்பினும், மறைந்து போயிருப்பினும் திருக்குறள் காலவெள்ளத்தால் அடித்துச் செல்லப்படாது நிலைத்த புகழ்கொண்டு நீடித்த வாழ்வைப் பெற்றுள்ளது. இடைக்காலத் தொல்காப்பிய உரையாசிரியர்கள் பல குறள்களை மேற்கோள்களாகத் தந்துள்ளார்கள். ஐரோப்பியப் பயணிகள், கிறித்துவத் துறவிகள் தொகுத்த அறவிலக்கியத் தொகுதிகளிலெல்லாம் திருக்குறள் சிறப்பிடம் பெற்றுள்ளதென்பதற்கும் குரோ சான்றுகள் தருகிறார். பாரிசில் 1769இல் ஃபிளாட் (M.de la Flotte) என்பார் வெளியிட்ட இந்தியா பற்றிய வரலாற்றுக் கட்டுரைகள் **(Essais historiques sur l'Inde)** கொண்ட நூலில் இருபது குறள்கள் ("Coral de Vallouren") இடம்பெற்றுள்ளன. இவை மோந்தவே (M. de Mondave) எனும் ஓய்வுபெற்ற கர்னல் இந்தியாவிலிருந்து கொண்டுவந்த விலையுயர்ந்த கையெழுத்துப் பிரதியிலிருந்து எடுக்கப்பட்டவை. இப்பிரதியில், மூலம் ஒருபக்கத்திலும் அதன் நேர் எதிர்ப்பக்கத்தில் பிரெஞ்சு மொழிபெயர்ப்பும் தரப்பட்டுள்ளன. பாரிசிலுள்ள தேசிய நூலகத்தில் வீரமாமுனிவரின் இலத்தீன் மொழிபெயர்ப்பும் வேறுபல மொழிபெயர்ப்புகளும் வைக்கப்பட்டுள்ளன. தேசுவால் (N- J.Desvaulx), 1777இல் வெளியிட்ட நூல் (L'Inde Philosophique entre Boussuet et Voltaire) திருக்குறளின் முதல் 24 அதிகாரங்களிலிருந்து எடுக்கப்பெற்ற பத்தொன்பது மேற்கோள்களைக் கொண்டுள்ளது. பூசே (Foucher d' Obsonville) என்பார் தமது **Observations d'un Voyageur de M (1783)** என்னும் நூலில் பத்துக்குறள்களை எடுத்தாண்டு, அவை **Poeme de Tirouvallouven** என்னும் 1330 கவிதைகளைக் கொண்ட நூலிலிருந்து எடுக்கப்பட்டவையென்றும் அந்நூல் 57 உறுப்பினர்களைக் கொண்ட மதுரைக் கல்விச்சங்கத்தால் தலைசிறந்த ஒப்புதலை விரைந்து பெற்றதென்றும் அவ்விலக்கிய நிறுவனம் நீண்டகாலத்திற்கு முன்னரே மறைந்து விட்டதென்றும் குறிப்பிடுகின்றார்.

புதுச்சேரியில் 1844 ஆம் ஆண்டிலிருந்து 1854ஆம் ஆண்டுவரை வாழ்ந்த ஏரியல் (Edouard Ariel), **Journal Asiatique** என்னும் இதழில் 1848–

இலிருந்து திருக்குறளின் பிரெஞ்சு மொழிபெயர்ப்பைத் தொடர்ந்து வெளியிட்டார். “காமத்துப்பால்” முழுவதும் 1852 மே - ஜூன் இதழில் வெளியானது. பாரிசில் 1867 இல் திருக்குறளின் முதல் முழு பிரெஞ்சு மொழிபெயர்ப்பை லமேரிஸ் (E. Lamairesse) பதிப்பித்தார். இவர் புதுச்சேரியில் பொதுப்பணித்துறையில் பொறியியலாளராகப் பணிசெய்தவர்.

ஜூடித் கௌடியர் (Judith Gautier) என்னும் கல்வியாளர் **La Conque'te du Paradis** எனும் நூலில் ஒரு குறளை மூலத்தைக் குறிப்பிடாமல் கையாண்டுள்ளார். திருக்குறளிலிருந்து கருத்துக்களைக் கடன் பெறுவது பிரெஞ்சு எழுத்தாளர்களிடையே பரவத் தொடங்கியது. ராஸ்னி (Lèon de Rosny), தமது **Variètès Orientales** எனும் நூலில் ஏரியலை அவர் இறப்பிற்குப்பின் மிகவும் பாராட்டி எழுதினார். அபாலினேர் (Guillaume Apollinaire), தமது நூல்களில் ஏரியலின் கையெழுத்துப் பிரதிகளை ஓரளவிற்குப் பயன்படுத்திக் கொண்டார். லமேர் (Lemerre), 1889 இல் பதிப்பித்த காமத்துப்பால் மொழி பெயர்ப்பிலிருந்து பல குறட்கருத்துக்களை எடுத்துக் கொண்டவர் சாம்சார் (Fèlicien Champsaur) ஆவார். இதனை 1902இல் வெளிவந்த Le Semeur d' amour எனும் நூலின் மூலம் அறியலாம். அந்நூலின் முன்னுரை திருக்குறளை வெளிப்படை யாகச் சுட்டுகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஸ்தாந்தல் (Stendhal) எனும் பிரெஞ்சு அறிஞரின் காதல்பற்றிய நூலில் திருக்குறளின் தாக்கம் பற்றி ஓரிரு சான்றுகளுடன் குரோ சுருக்கமாகக் குறிப்பிடுகிறார். ஸ்தாந்தல் தமது நூலின் இறுதிப்பகுதியை எழுதும்போது திருக்குறள் பற்றி அறிந்திருந்த ஜேக்மா (Victor Jacquemont) விடமிருந்து பல செய்திகளைத் திரட்டினார் என்பது நன்கு புலனாகின்றது.

> We know that Stendhal collected information from young Jacquemont when writing, in 1825, his final chapter, “Example of love in France amongst the rich,” from which I extract: “...She maintains strictness during the tête - a- tête. She thus increases her husband's desire.” This matches kural, last chapter, I and 2. (ப.128)
>
> [இல்லை தவறு அவர்க்கு ஆயினும்ஊடுதல்
> வல்லது அவர்அளிக்குமாறு. (1321)

ஊடலின் தோன்றும் சிறுதுனி நல்லளி
வாடினும் பாடு பெறும். (1322)]

இரண்டு நூல்களிலும் காணப்படும் ஒற்றுமைக்கருத்துகள் ஒரு தனிச்சுவையைத் தருவன என்று கூறும் குரோ மேலும் ஓரிரு சான்றுகளைத் தருகிறார்.

Starting with the situation envisaged by the first chapter of the Book of Love and this brief paragraph from chapter I of Stendhal: "Out hunting, to find a beautiful fresh peasant girl who flees into the woods. Everybody knows the love founded on pleasures of this kind; however dry and unfortunate, one begins like that at sixteen." The Tamil commentators ascribe the first episode of the **Book of Love** to fifteen and ten months, to celebrate the marriage of the hero when he is sixteen. (ப.128)

(முதல் பார்வையிலேயே காதல் வயப்படும் தலைவனுக்கு வயது 15 ஆண்டுகளும் 10 மாதங்களும் என்பர். அவனுக்குத் திருமண வயது 16 எனக் கருதப்பட்டது.)

காமவயப்பட்ட தலைவியும் தலைவனும் மாலையில்படும் வேதனையைத் தமிழ் அகஇலக்கியங்கள் யாவும் காமத்துப்பாலும் பலவாறாகச் சித்திரிக்கின்றன. ஸ்தாந்தலும் இதனை விளக்கமாகப் பேசக்காணலாம்.

காலைக்குச் செய்தநன்று என்கொல் எவன்கொல்யான்
மாலைக்குச் செய்த பகை? (1225)

காலை அரும்பிப் பகல்எல்லாம் போதாகி
மாலை மலரும்இந் நோய். (1227)

....the theme of twilight in the Tamil world of imagination corresponds to the place Stendhal gives to solitude, reverie and memory in his twilights ("twilight, he adds, Ave Maria in Italian"): hours of pleasures which remain to the senses but as memories" (De I' Amour, fragment divers 66, ed.H.Martineau)

(தமிழ் அகஇலக்கியங்கள் மாலைப்பொழுதிற்குக் கொடுக்கும் சிறப்பை, ஸ்தாந்தல் பிற்பகல் முடிந்து இரவு தொடங்கும் (twilight) நேரத்திற்குத் தருகிறார்.)

II

திருக்குறளின் காமத்துப்பால் ஐரோப்பிய நாடுகளில் பெற்றிருந்த செல்வாக்கு மிகப்பெரிது என்பதை, ஃபிரான்சுவா குரோ,

Tiruvalluvar has his place in the libraries of
Europe amongst the classics of love (ப.129)

என்று குறிப்பிடுவார்.

திருக்குறள் மொழிபெயர்ப்பாளர்களில் ஒருவராகிய ஏரியல் தனது நண்பராகிய பர்னூஃப் (Eugène Burnouf) என்பாருக்குப் புதுவையிலிருந்து எழுதிய கடிதத்தில் (18, மே 1848) திருக்குறளைப் "பெயரில்லாத ஆசிரியர் எழுதிய பெயரில்லாத நூல்" ("This nameless book by a nameless author") என்று குறிப்பிடுவார். இக்கடிதம் 1848ஆம் ஆண்டின் இறுதியில் வந்த **Journal Asiatique** இதழில் காணப்படுகிறது.

பல பிரெஞ்சுக் கல்வியாளர்கள் அக்காலத்தில் திருவள்ளுவரைப் பற்றித் தமிழகத்தில் வழங்கிய கதைகளையெல்லாம் தங்கள் நூல்களில் சொல்லி "அவரைப் பறையரினத்தைச் சேர்ந்த பேரறிஞர்" என்றும் "தெய்விகப்பறையர்" ("divine pariah") என்றும் போற்றினர். அவரது புகழ் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே பிரான்சில் அடைந்த உச்சநிலையைச் சுட்டும் நிகழ்ச்சி ஒன்றையும் குரோ எடுத்துரைப்பார். ஜகோலியாத் (Louis Jacolliot) என்பார் **Le pariah dans l 'humanite'** (1876) என்னும் நூலில் "கடமைகளைப் பற்றிய நூல்" (The Book of Duties) என்பது திருவள்ளுவரால் எழுதப்பட்டதன் மொழிபெயர்ப்பென்று ஒரு பகுதியைச் சேர்த்துள்ளார். இது ஒரு பெரிய இலக்கிய மோசடியென்று பின்னால் வான்சான் (Julien Vinson) என்னும் தமிழ்ப்பேராசிரியர் தெளிவுபடுத்தினார்.

திருவள்ளுவரின் பிறப்பு, வாழ்க்கை, அவர் உடன்பிறந்தோர் பற்றியெல்லாம் சொல்லப்பட்ட கதைகளின் சுருக்கத்தை ஏரியல் **Journal Asiatique** இதழொன்றில் (சனவரி 1847) ஒரு கட்டுரையாக "Tiruvalluvar Charitra" என்ற பெயரில் எழுதினார். இதை வான்சான் முழுவதுமாக மொழிபெயர்த்து **Revue Orientale et americaine** என்னும் இதழின் ஒன்பதாவது தொகுதியில் 1864 இல் வெளியிட்டமை நினைவுகூரத் தக்கது.

தொடர்ச்சி அடுத்த இதழில்

வள்ளல் பாண்டித்துரைத் தேவர் உ.வே.சாமிநாதையரவர்களுக்கு எழுதிய கடிதங்கள்

பேராசிரியர் **இ.சுந்தரமூர்த்தி,**
மேனாள் துணைவேந்தர்,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
16, பாரதி தெரு,
திருமலை நகர் விரிவு, பெருங்குடி,
சென்னை - 600 096.

பழந்தமிழ் நூல்களை அச்சிட்டுத் தமிழுக்கு வளம் சேர்த்த பெருமக்கள் இருவர். ஒருவர் தமிழகமெங்கும் ஏடுதேடி அலைந்து சங்க நூல்களைப் பெருமுயற்சியோடு பதிப்பித்த தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதையர் (1855 - 1942). இன்னொருவர் இத்தமிழ்ப் பணிக்கு உறுதுணையாயிருந்த வள்ளல் பாண்டித்துரைத்தேவர் (1876 - 1911).

உ.வே.சாமிநாதையர் அரிய நூல்களைப் பதிப்பித்தது போலவே பாண்டித்துரைத் தேவரும் பன்னூற்றிரட்டு, சைவமஞ்சரி முதலாய நூல்களைப் பதிப்பித்தார். ஆ.சிங்காரவேலு முதலியார் அவர்கள் உருவாக்கிய அபிதான சிந்தாமணியை வெளியிடப் பெரிதும் துணைநின்றவர் பாண்டித்துரைத் தேவர். இந்நூல் கலைக் களஞ்சியப் பதிப்பு வரலாற்றில் முன்னோடியாகத் திகழும் நூல். புதுமையான நூலைப் போற்றிப் புரந்த வள்ளல் பாண்டித்துரைத் தேவர்.

புதிய நூல்களை அச்சிடுவதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த பெருந்தகை. மரபுமாறிப் பதிப்பித்த திருக்குறள் நூலை மறுத்தவர். முருகவேள் காவடிச்சிந்து, சிவஞானமுனிவர் இரட்டைமணிமாலை முதலாய நூல்களைப் படைத்தவர் வள்ளல் பாண்டித்துரைத் தேவர்.

மொழிப்பற்றும், சமயப்பற்றும் கொண்ட இப்பெருந்தகை இளம் வயதிலேயே மறைந்தது நம் தவக்குறைவேயாகும்.

பாண்டித்துரைத்தேவர் சாமிநாதையருக்கு அவ்வப்போது பல கடிதங்களை எழுதியுள்ளார். அவையாவும் தமிழ் மேம்பாடு பற்றிய அரிய மடல்களாகும். அச்சில்வாராத அருந்தமிழ் நூல்களைப் பதிப்பிக்க எண்ணும் அவர்தம் தமிழார்வம் இம்மடல்களால் புலனாகின்றன.

நூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னர் எழுதிய இம்மடல்கள் அக்காலத் தமிழ்ச்சூழலையும், இருவருக்குமிடையே இருந்த தமிழ் உறவையும் பற்றையும் காட்டும்.

உ.வே.சாமிநாதையர் அவர்கள் புறநானூற்றுப் பதிப்பை 1894-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் வெளியிட்டார்.

அந்நூலின் படி ஒன்றினை வள்ளல் பாண்டித்துரைக்கு அனுப்பி வைத்தார். அவர் அந்நூலினைப் பெற்றுக்கொண்டு 14.11.1894 அன்று ஐயரவர்களுக்கு ஒருமடல் விடுத்தார். அம்மடல் வருமாறு:

உ

திருச்சிற்றம்பலம்

கல்வியறிவொழுக்க முதலிய எந்நலனுமினிது வாய்ப்பச் சிறந்து விளங்கும் ஐயரவர்கட்கு அநேக நமஸ்காரம்.

தாங்கள் அன்புற்றனுப்பிய புறநானூறு என்னும் புத்தகம் வந்து சேர்ந்தது. உடனே பதிலனுப்பாதிதுகாறும் தாமதித்தற்குக் காரணம் எய்தற்கரிய எனது பிதாவினது வியோகத்தாலுற்ற மனக்கவலே.

தங்களால் லோகோபாரமாய் அரிய நூற்களச்சிடுவதாக எடுத்துக் கொள்ளப்பட்ட நன்முயற்சிக்கு என்னாலியன்ற உதவியைச் செய்யவெப்பொழுதும் ஆவலுற்றிருப்பவனாதலின் அதற்குரிய நற்சமயம் அறிவிக்கக் கேட்டுக்கொள்ளும்.

தங்கள் பாண்டித்துரை

14.11.94

இராமநாதபுரம்

ஐயரவர்களின் பல நூல்களுக்கும் வள்ளல் பாண்டித்துரைத் தேவர் பொருளுதவி புரிந்திருக்கின்றார்.

புறநானூற்றுக்கு அவர் பொருள் உதவி செய்தது குறித்து ஐயரவர்கள் 'என் சரித்திரம்' என்னும் நூலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். (பக்.740-741)

'புறநானூற்றைப் பெற்றுக் கடிதம் எழுதியவர்களுள் பாலவநத்தம் ஜமீன்தாராகிய பாண்டித்துரைத் தேவரும் ஒருவர். இக்கடிதம் வந்த சிலவாரங்களுக்குப் பிறகு அவர் திருவாவடுதுறை ஆதீனகர்த்தரைத் தரிசிக்கும் பொருட்டுத் திருவிடை மருதூருக்கு வந்தார். ஆதீன கர்த்தராகிய அம்பலவாண தேசிகர் அவர் வரவை எனக்குத் தெரிவித்து

என்னையும் வரும்படியாக எழுதினார். அவ்வாறே சென்று பாண்டித்துரையைச் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தேன். அவர் புறநானூற்றுப் பதிப்பைப் பாராட்டிவிட்டு 'இனிமேல் எந்த நூலை அச்சிடப்போகிறீர்கள்' என்று கேட்டார்.

'பல நூல்கள் இருக்கின்றன. மணிமேகலையை அச்சிடலாமென்று நினைத்தேன். ஆனால் இன்னும் அதிலுள்ள சில விஷயங்கள் தெளிவுபடவில்லை'.... என்று கூறியதாக எழுதுவர்.

பாண்டித்துரைத்தேவர் இராமநாதபுரம் சென்றவுடன் எனக்கு ஒரு செய்யுட் கடிதமும் ஐந்நூறு ரூபாய்க்கு ஓர் உண்டியலும் 17.12.94 அன்று எனக்கு அனுப்பினார்.

பாண்டித்துரைத் தேவர் எழுதிய செய்யுட்கடிதத்தில் சில பகுதிகள் வருமாறு:

1. திங்கள் புரையும் திருவதனச் செவ்வியொரு
   பங்கின்அமர் பெம்மான் பதமலரே - துங்க
2. முடிக்கணியாத் தாங்கி முதுபரவை வேலிப்
   படிக் கணியாயென்றும் பலநூல் வடிக்கும்
3. உளத்தார்க் கொருநிதியா யோங்குபுகழ் மேய
   வளத்தா லுயர் குடந்தை மன்னித் - துளக்கரிய
4. நேமிநாதன் மருகில் நேயமனையா ளோடுவாழ்
   சாமிநாதைய தகுநண்ப - மாமுகவை
5. மன்னிய பாண்டித்துரை பல் வந்தனஞ் செய்தின்றெழுதும்
   நன்னிருபம் ஈதாம்.
6. காமாரி தந்தவிளங் காதலனே ராய்த்தமிரன்
   மாமாரி பெய்துலகை வாழ்விப் போய்...
7. பயன்சிறிய தேனும் பனையளவாக் கொள்வர்
   நயன்றெரி வோரென்ற வுண்மைநாடி - முயன்றிதுபோது
8. ஐந்நூறு ரூபாவனுப்பினேன் அஃது ஏற்றருள்வாய்
   மெய்ந்நூறு உரீஇயொழுகும் வித்தகா - மைந்நூறி
9. ஆமாலையிற் சுவையுண்டாக்கும் - புறப்பொருள் வெண்
   பாமலை யச்சிற் பதிவு செயும் - மாமுயற்சி
10. ஊறிகந்து முற்ற லுறுவிப்பா னோங்குவான்
    ஆறுகந்த சென்னி யருள்.

'பாண்டித்துரைத் தேவர் செய்த உதவியை நான் பாராட்டி எழுதியதோடு அம்பலவாண தேசிகரிடமும் தெரிவித்தேன்' என்று ஐயரவர்கள் என் சரிதத்தில் எழுதுவார்.

பாண்டித்துரைத் தேவர் கடிதம் புறப்பொருள் வெண்பாமாலைப் பதிப்பைத் தொடங்கத் தூண்டுகோலாக அமைந்தது என்பார்.

பாண்டித்துரைத் தேவர் சாமிநாதையரோடு கொண்டிருந்த அன்பும் மதிப்பும் பன்னூல்களைப் பதிப்பிக்க ஐயரவர்களுக்குத் துணையாய் அமைந்தது. பாண்டித்துரைத் தேவரின் பல்வேறு மடல்கள் அவர்தம் நூல் வெளியீட்டு முயற்சியைப் பாராட்டிப் போற்றின. அச்சு நூல்களின் பல படிகளைப் பெற்று அனைவருக்கும் அவை சேருமாறு அருந்தமிழ்த் தொண்டாற்றினார்.

மன்னர் பாண்டித்துரைத் தேவர் பன்னூல்கள் பல இயற்றியவர். தான் தொகுத்த சைவமஞ்சரி நூல் ஒன்றிற்குச் சிறப்புப் பாயிரம் வேண்டி உ.வே.சாமிநாதையருக்கு 11.11.1900 நாளன்று ஒரு மடல் விடுத்துள்ளார். அக்கடிதத்தின் மூலம் தமிழ்த்தாத்தா மீது அவர் கொண்டிருந்த பெருமதிப்புப் புலனாகின்றது. அக்கடிதம் வருமாறு:

மதுரை

11.11.1900

உ

திருச்சிற்றம்பலம்

அன்புமிக்க ப்ரும்மஸ்ரீ ஐயரவர்கட்கு அநேக நமஸ்காரம் செய்து எழுதுவது.

ஈங்கு யாமெல்லாம் சுகமுடையோம். ஆங்குத் தங்கள் க்ஷேமாதிசியங்கட்குக் கடிதமெழுத வேண்டுகின்றேன்.

யான் சில காலமாகவே பன்னூற்றிரட்டுப் போலவே பல அதிகாரவடைவுடையதாகச் சைவநூல்கள் பலவற்றையும் ஆராய்ந்து, "சைவமஞ்சரி" எனப் பெரிய நூலொன்று தொகுத்து வருதல் தாங்கள் அறிந்திருக்கலாமென்றெண்ணுகிறேன். அந்நூலில் இதுகாறும் அச்சிட்டு முடிந்த பாரங்களைத் தங்கள் பார்வைக்கு விடுத்துள்ளேன். கல்வியறிவொழுக்கங்களானமைந்த தாங்கள் அதனைப் பார்வையிட்டுச் சிறப்புப் பாயிரமொன்று இயற்றியனுப்புமாறு தங்களை வேண்டுகின்றேன்.

இங்ஙனம்

தங்கள்

பாண்டித்துரை

இம் மடலில் வேண்டியவாறே அய்யரவர்கள் வள்ளல் பாண்டித்துரைத் தேவருக்கு எட்டுப் பாடல்களைச் சிறப்புப்பாயிரமாக எழுதி அனுப்புகின்றார். சைவமஞ்சரி என்னும் நூலுக்கு அளித்த இவ்வெட்டுப் பாடல்களின் மூலம் வள்ளல் பாண்டித்துரைத் தேவரின் புலமையும் பெருமையும் புலனாகும்.

அவர் எழுதி அனுப்பிய பாடல்கள் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தில் அமைந்தவை. அவற்றுள் சில வருமாறு:

மாமேவு பிறைச் சடையும் துறைக்களமும்
திருவுருவ வனப்பும் என்றும்
தூமேவு தனதுயர்வு புலப்படுத்த
விளங்குபரஞ் சோதி கஞ்சப்
பூமேவும் அயன் முதலோர்க் கரியனடி
யவர்க் கெளியன் புகன்றவாய
தூமேவும் எழுநூலா கமங்கள்நவில்
பொருளெவர்க்கும் துலக்க ஓர்ந்தே

அரியவர்கட்கு எளியனான பாண்டித்துரைத் தேவர் புகன்ற இந்நூல் ஆகமங்களின் தொகுப்பாய் அமைந்து எல்லோருக்கும் எளிமையாய்ப் புரியுமாறு அமைந்துள்ளது எனப் பாராட்டுவார்.

வீறியபே ரறிஞர்நம தருந்தமிழில்
விளம்பியருள் விழுப்பம் மிக்க
ஊறியவான் சுவையுடைப்பல் பனுவல்களும்
ஆராய்ந்தாய்ந் துறுதி வாய்ப்பக்
கூறியவா கமசார மாகமிளிர்
பாவையாவும் குலவச் சேர்த்துப்
பேறியலும் அவற்றைமுறை பிறழாமல்
இனிமைமிகப் பிறங்க ஏய்த்தே

ஆகமத்தின் சாரமாகச் சைவமஞ்சரி உருவாக்கப் பெற்றுள்ளது என்பார். பனுவல்கள் பலவற்றையும் ஆராய்ந்து ஆராய்ந்து உருவாக்கப்பெற்றது எனவும் ஐயரவர்கள் இந்நூலின் பெருமையை விளங்க உரைப்பார்.

துன்பமின்றிப் பல நூல்களையும் அவற்றின் கருத்துக்களையும் சைவமஞ்சரி மூலம் பெற்றோம் என்று சிலர் மகிழ்ந்தனர். பன்னூல் கற்றோம் எனச்சிலர் உரைத்தனர். கரையில்லாத பவக்கடலைக்

கடந்தேம்; பந்தம் அற்றேம் என்று சிலர் இந்நூலைப் பார்த்து உரைப்பாராயினர் என்று பாராட்டுவார்.

சற்றேனும் துயரின்றிச் சைவ நூல்
 பலவெளிது சார இன்று
பெற்றேமென் றுரைப்பாரும் பிழைத்தேமென்
 றுரைப்பாரும் பிறங்கு பன்னூல்
கற்றேமென் றுரைப்பாரும் கரையிலாப்
 பவக்கடலைக் கடந்தேம் பந்தம்
அற்றேமென் றுரைப்பாரும் அறிந்தேமென்
 றுரைப்பாரும் ஆகப் பல்லோர்
நலம் பிறங்கும் இயற் சைவமஞ்சரி யென்
 றொரு பெருநூல் நல்கினானால்
புலம்பிறங்கும் அனையபெருந் தகையாவன்
 என்பீரேற் புகல்வேன் இந்தத்
தலம் பிறங்கு தவமெனவும் தமிழ்ப்புவிசெய்
 தவமெனவும் தயங்கு மேன்மைக்
குலம்பிறங்கு தவமெனவும் குணம்பிறங்கு
 தவமெனவும் குலவு மேலோன்

ஐயரவர்கள் எட்டுப் பாடல்களின் மூலமும் சைவமஞ்சரியின் சிறப்பையும் பாண்டித்துரைத் தேவரின் புலமை நலச்சிறப்பையும் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

செந்தமிழின் மேம்பாடு கருதி 1901-ஆம் ஆண்டு மதுரையில் ஓர் தமிழ்ச்சங்கம் தொடங்க உள்ளது. எனவே தாங்கள் அவசியம் கலந்துகொள்ள வேண்டும் என்று ஒரு மடலையும் அழைப்பிதழையும் ஐயரவர்கட்கு 2.1.1901 அன்று விடுத்துள்ளார் பாண்டித்துரைத் தேவர். அம்மடல் வருமாறு:

தொடர்ச்சி அடுத்த இதழில்

சைவசித்தாந்தமும் திருமந்திரமும்

- முனைவர் **உ.கருப்பத்தேவன்**
உதவிப்பேராசிரியர் - தலைவர் (பொ),
ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை - 21.
கைபேசி: 9443571776

சென்ற இதழின் தொடர்ச்சி

"மும்மலம் நெல்லி னுக்கு
முளையோடு தவிடு மிப்போல்
மம்மர்செய் தணுவின் உண்மை
வடிவினை மறைத்து நின்று
பொய்ம்மைசெய் போக பந்த
போத்திருத் துவங்கள் பண்ணும்
இம்மலம் மூன்றி னோடும்
இருமலம் இகைப்பன் இன்னும்"

(சிவஞான சித்தியார், பா.எண்.2:86)

எனவும்,

"மாயையின் காரி யத்தை
மாயேய மலம தென்றும்
ஏயும்மும் மலங்கள் தத்தம்
தொழிலினை இயற்ற ஏவும்
தூயவன் றனதோர் சக்தி
திரோதான கரிய தென்றும்
ஆயவர்இம் மலங்கள் ஐந்தும்
அணுக்களை அணைந்து நிற்கும்"

(சிவஞானசித்தியார், பா.எண்.2:87)

எனவும் வரும் சிவஞான சித்தியாரின் பாடல்கள் ஆழ்ந்த சைவசித்தாந்தப் பார்வைக்கு உரியவை. சிவப்பிரகாசம் ஐந்துவகையான சைவசித்தாந்த மலங்களையும் பின்வரும் பாடலில் தொகுத்துக் கூறுகின்றது.

"மோகம்மிக உயிர்கள்தோறும் உடனாய் நிற்கும்
மூலஆ ணவம்ஒன்று; முயங்கி நின்று

பாகம்மிக உதவு திரோதாயி ஒன்று;
பகர்மாயை ஒன்று படர்கன்மம் ஒன்று;
தேகமுறு கரணமொடு புவனபோகச்
செயலாரும் மாமாயத் திரட்சி ஒன்று;
ஆகமலம் ஐந்தென்பர்; ஐந்தும் மாறாது
அருள் என்ப தரிதென்பர் அறிந்து ளோரே"

(சிவப்பிரகாசம், பா.எண்.32)

"மும்மலம் அறுவித்து முதலாய முதல்வன்றான்"

(திருவாசகம், அச்சோபதிகம், பா.எண்.9)

என மூன்று மலங்களைக் குறிப்பிட்ட மாணிக்கவாசகர், நீத்தல் விண்ணப்பத்தில்,

"மலங்களைந் தாற்சுழல் வன்றயி
ரிற்பொரு மத்து றவே"

(திருவாசகம், நீத்தல் விண்ணப்பம், பா.எண்.29)

என ஐந்து மலங்களையும் குறிப்பிட்டுள்ளார். திருமூலரும் தன்னுடைய திருமந்திரத்தில் முத்தாய்ப்பாக,

"சிவமாகி ஐவகைத் திண்மலம் செற்றோர்
அவமாகாச் சித்தர்முத் தாந்தது வாழ்வர்
பவமான தீர்வோர் பசுபாசம் அற்றோர்
நவமான தத்துவம் நாடிக்கண் டாரே"

(திருமந்திரம், இரண்டாம் தந்திரம், பா.எண்.497)

எனக் குறிப்பிட்டுள்ளார். சிவச்சிந்தனையில் ஒன்றி ஐந்துவகையான மல அழுக்குகளையும் வென்றவர்கள், அழிவில்லாத சித்த புருடர்களாக முத்தி முடிவில் வாழ்வர். அவர்கள் உலகில் பிறந்திறக்கும் துயரங்கள் நீங்கியவர்கள் ஆவர். பசு, பாசம் என்னும் பாசத் தொடர்புகளை அறுத்த அவர்கள், சிவப்பரம்பொருளின் ஒன்பது தத்துவங்களையும் நாடிப்பெற்ற ஞானிகள் ஆவர். ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி என்பன ஐந்துவகையான திண்மலங்கள் ஆகும்.

'முத்தாந்தம்' என்பது முத்தியின் முடிவாகும். அது மரணமிலாப் பெருவாழ்வினைக் குறிக்கும். சிவம், சக்தி, நாதம், விந்து, சதாசிவம், மகேசுவரம், உருத்திரன், திருமால், பிரமன் என்பன சிவப்பரம்பொருளின் ஒன்பது தத்துவங்கள் ஆகும். திருமூலர், ஆணவத்தை விட்டவர்கள்

அஞ்ஞாலத்தை விடுவர்; மயக்கம் கொண்டவர்கள் மறுபடியும் பிறப்பர். ஆணவத்தை விட்டோர் சிவனருளால் வீடுபேறு அடைவர் என்பதைப் பல பாடல்களில் வலியுறுத்தியுள்ளார். உத்தமர் விஞ்ஞானர், மத்திமர் பிரளயாகலர், கடையினர் சகலர் எனவும் கூறுகின்றார். மூன்றுவகைச் சீவான்மாக்களைக் கூறும் அவர், சீவனின் சித்தத்தில் சிவம் புகுந்து சிவமாகும் என்கின்றார்.

"சத்தி சிவன் விளையாட்டால் உயிராக்கி
ஒத்த இருமாயா கூட்டத்து இடைபூட்டிச்
சுத்தம தாகுந் துரியம் பரிவித்துச்
சித்தம் புகுந்து சிவமய மாக்குமே"

(திருமந்திரம், இரண்டாம் தந்திரம், பா.எண்.492)

சத்தியும் சிவனுமாக விளங்குகின்ற சதாசிவப் பரம்பொருளின் விளையாட்டாகிய அருட் கருணையால் உயிராக்கி, உடலை உயிர்பெறச் செய்து சுத்தமாயை, அசுத்தமாயை என்னும் இருமாயைகளுக்கிடையே சேரவிட்டு, பின்னர் அந்த ஆன்மாக்களை அந்த மாயைகளின் மயக்கத்திலிருந்து பிரித்து மனதிற்குள் தங்கி சீவன்களைச் சிவமயமாக்கும் என்கின்றார் திருமூலர். இந்தச் சீவான்மாக்களையே அவர் விஞ்ஞானர், பிரளயாகலர், சகலர் என மூவகைப்படுத்தியுள்ளார். திருமூலர் ஐந்தாம் தந்திரத்தில் சுத்த சைவம், அசுத்த சைவம், மார்க்க சைவம், கடுஞ்சுத்த சைவம் ஆகிய சைவங்களைச் சுட்டிக் காட்டி, அவற்றை அடைவதற்குரிய சரியை, கிரியை, யோகம், ஞானம், சன்மார்க்கம், சகமார்க்கம், சற்புத்திரமார்க்கம், தாசமார்க்கம் முதலான மார்க்கங்களைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

ஆலய வழிபாடு – மானுட உடல்

தமிழ்நாட்டிலுள்ள பெரியகோயில்கள் அனைத்தும் இடைக்காலத்தில் தோற்றுவிக்கப்பட்டவையே. தமிழ்நாட்டின் கோயில்கள் அனைத்தும் ஆகமத்தின் அடிப்படையில் கட்டப்பெற்றவையே. மலைகளைக் குடைந்தும் பல்வேறு கோயில்கள் கட்டப்பெற்றன. இக்கோயில்கள் குடைவரைக் கோயில்கள் என்றழைக்கப்பெற்றன. இவ்வாறு அமைக்கப்பட்ட கோயில்கள் 'மானுட உடல்' என்னும் ஆலயத்தின் புறச்சின்னமாகும். மானுட உடலே ஆலயங்களில் மிகச் சிறந்தது என்பதைத் திருமூலர் உள்ளிட்ட சைவச் சான்றோர் ஏற்றுள்ளனர். அண்டமெங்கும் 'அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்'

குடிகொண்டிருக்கும் இறைவனாகிய சிவன் சிறப்பாக மானுட உடலில் வீற்றிருக்கின்றான் என்பது திருமந்திரத்தின் தலையாய கோட்பாடாகும். இதனை,

"உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டானென்று
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே"

(திருமந்திரம், மூன்றாம் தந்திரம், காயசித்தி உபாயம், பா.எண்.2)

என்னும் திருமந்திரப் பாடலால் அறியலாம். திருமூலர் உடம்பை வளர்ப்பது உயிரை வளர்ப்பதற்கு ஒப்பாகும் என வலியுறுத்தியுள்ளார்.

"உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே"

(திருமந்திரம், மூன்றாம் தந்திரம், காயசித்தி உபாயம், பா.எண்.1)

என்பது அப்பாடலாகும். இப்பாடல்களில் திருமூலர் கூறியுள்ள தத்துவச் சிந்தனைகளைப் பாமர மக்களால் அறிய இயலாது. அவர்கள் எளிமை அறிந்து கொள்வதற்காகவே திருக்கோயில்கள் அமைக்கப் பெற்றுள்ளன. ஆகமங்களின் விதிப்படியே கோயில்கள் அமைக்கப்பெற்றுள்ளன. 'ஆலயம்' என்பதே 'உடல்' என்னும் ஆலயத்தின் புறச்சின்னமாகும். மூல அமைப்பாகிய மனித உடலிலுள்ள தத்துவங்களுக்கு ஏற்றவாறு, அவற்றுக்கு ஒத்திருக்குமாறே கோயில்கள் வடிவமைக்கப் பெற்றுள்ளன. இந்தக் கோயில்களின் வாயிலாக மனித உடலமைப்பிலுள்ள மகிமைகளை நுணுக்கமாகத் தெளிந்து கொள்ளலாம். நாட்டின் வரைபடத்தைக் கொண்டு நாட்டினை நன்கு அறிந்து கொள்வதைப் போலவே, திருக்கோயில்களின் துணைகொண்டு மனிதர்கள் தமக்கு இயல்பாக அமைந்துள்ள 'உடல்' என்னும் ஆலயத்தின் தத்துவங்களை அறியலாம்.

தொடர்ச்சி அடுத்த இதழில்

குறிஞ்சிச் சிந்தனை

புலவர் சி.பாண்டுரங்கன் எம்.ஏ., பி.எட்.,
43, ஆறாம் தெரு, காமராசர் சாலை,
கிருட்டிணாபுரம்,
ஆம்பூர் - 635 802.

இயற்கைக் கடிகாரம் போல குறிஞ்சி

நயமாகப் பூக்கும் நலம்.

குறிஞ்சி என்னும் சொல், (ஸ்ட்ரோபிளாந்தஸ்) தாவரவகை, நிலவகை, திணைவகை, பண்வகை ஆகிய வெவ்வேறு பொருள்களில் ஆளப்படுகிறது. ஆசிய குறிஞ்சி மலர் 150 வகை! நிகழும் 2018ஆம் ஆண்டு, 12 ஆண்டுக்கொருமுறை பூக்கும் குறிஞ்சியும் உள்ளதால் குறிஞ்சி விழா ஆண்டு.

குறிஞ்சி மலர்:

இயற்கையில் எத்தனையோ அதிசயங்கள் உள்ளன. தாழிப் பனையில் அறுபது முதல் நூறாண்டுகளுக்கொருமுறை பூத்துக்காய்க்கும் வகை உள்ளதாம். பன்னிரண்டு ஆண்டுகளுக்கொருமுறை மட்டுமே பழுக்கும் நாவல் பற்றி மணிமேகலைக் காப்பியத்தில் குறிப்பு உள்ளது.

“சீர்திகழ் நாவலிற் றிப்பிய மானது
ஈரா றாண்டி லொருகனி தருவது
அக்கனி யுண்டோ ராறீ ராண்டு
மக்க ளியாக்கையின் வரும்பசி நீங்குவர்”

- மணிமேகலை 17:37-40

ஆனால், பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மலர்கின்ற குறிஞ்சிவகை உள்ளது என்பது பலரும் அறிந்த உண்மை!

பன்னிரண்டு என்னும் எண் நெடுங்காலமாகவே பலதுறைகளிலும் முக்கிய இடம் பெற்றுள்ளது. அகத்தியரின் மாணாக்கர் எண்ணிக்கை பன்னிரண்டு, இராசிகள் பன்னிரண்டு, ஆண்டின் மாதங்கள் பன்னிரண்டு,

ஒரு கலத்தின் மரக்கால் அளவை பன்னிரண்டு, மெய்கண்டார் இயற்றிய சிவஞான போதத்தின் சூத்திரங்கள் பன்னிரண்டு, சைவத் திருமுறைகள் பன்னிரண்டு, மகாமகம் திருவிழா மற்றும் திருக்குடமுழுக்குப் பெருவிழா நடத்தும் ஆண்டு இடைவெளி பன்னிரண்டு; வியாழன் கோள், குறிப்பிட்ட ஒரு இராசியில் வந்து ஓராண்டு பயணிக்கும் நிகழ்வு 12 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான். ஓரினக் குறிஞ்சி, மலரத் தொடங்கும் ஆண்டு இடைவெளியும் பன்னிரண்டு தான்! இத்தகைய கால இடைவெளியில், குறிஞ்சி பூக்கத் தொடங்குவதைப் பலரும் அறிவர்.

சங்ககாலந் தொடங்கி, மக்கள் கவனத்தை ஈர்த்து வரும் பெருமை குறிஞ்சிச் செடிக்கு உண்டு. குறிப்பிட்ட ஆண்டுகளின் இடைவெளியில் பூக்கின்ற இதன் இயல்புதான் முதன்மையான காரணம். குறிஞ்சிச் செடி பற்றி நற்றிணை முதல் புறநானூறு வரை, பலவற்றிலும் குறிப்புகள் காணப்படுகின்றன. குறிஞ்சிப்பூவில் கிடைக்கும் தேன் மிகச்சிறந்ததெனக் கருதினர்.

"...கருங்காற் குறிஞ்சி மதனில் வான்பூ,
ஓவுக் கண்டன்ன இல்வரை இழைத்த
நாறுகொள் பிரசம் ஊறு நாடற்குக்
காதல் செய்தலும் காதலம் அன்மை.."

எனவரும் நற்றிணை (268) பாடல் வரிகள் இவ்வுண்மையை உணர்த்துவன.

குறிஞ்சி பூக்குங்காலத்து, மலைச்சாரல் எங்கும் பூத்து, தேன் நிரம்பியிருக்கும். எனவே, தேனீக்கள், பெரிய தேனடைகளைக் குறிஞ்சித் தேனால் நிரப்பும்.

அறிவியல் அறிஞர்கள், ஒருபொருளின் நிறம், அளவு, இயல்பு முதலான பலவற்றையும் ஆய்வர்.

இத்தகைய ஆய்வு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தொடங்கிவிட்டது. (முடமோசியார் புறநானூறு: 374) "கருங்கோற்குறிஞ்சி அடுக்கம் பாட" முற்பட்டதே சான்றாகும். மேலும் பிசிராந்தையாரின்,

"....பெயர்குவை,

கருங்கோற் குறிஞ்சிநும் உறைவுஇன் ஊர்க்கே" என்னும் (அகநானூறு : 308) பாடல் வரிகளும் நிற ஆய்வை உட்கொண்டவையே.

குறிஞ்சி நிலம்:

கடல் மட்டத்திலிருந்து ஓரிடம் எவ்வளவு உயரத்திலுள்ளது எனக் கண்டறியும் கருவிகள் உருவாக்கப்படாத அக்காலத்தில்; சுமார் ஆயிரம் 'மீட்டர்' மற்றும் அதற்கு மேற்பட்ட உயரத்தில் மட்டுமே வளரக்கூடிய ஒரு செடியை இனம் கண்டனர் நம் முன்னோர். எனவே, மலையும், மலை சார்ந்த பகுதியும் ஆகிய நிலவகையைக் குறிக்க, அச்செடியின் பெயராகிய 'குறிஞ்சி' என்பதையே வழங்கினர். எனவே இப்பெயர் சூட்டியது அவர்தம் நுண்மாண் நுழைபுலத்தை உணர்த்துகிறது.

தொல்காப்பியர், குறிஞ்சி நிலத்தை, "சேயோன் மேய மைவரை உலகம்" என்று பொருளதிகாரத்தில் சுட்டுகின்றார்.

குறிஞ்சி நிலக் காட்சி:

குறிஞ்சி நிலக் காட்சிகள், மனம் கவர்வன; மகிழ்வூட்டுவன. இதில் திளைத்த எத்தனையோ புலவர்கள், தாம் கண்ட காட்சியை, ஏடாகிய திரையில், எழுத்தோவியமாக்கி, இலக்கணச் சட்டத்திலடங்கிய இலக்கியக் கண்ணாடியில் வைத்தனர். அவருள் ஒருவர் கபிலர். அவர் பாடலில் ஒரு பகுதியை மட்டும் சுவைப்போம்: மலைப்பகுதியில் ஓங்கி உயர்ந்த மூங்கில்கள் அசைந்தாடி உரசுகின்றன. அதனால், மூங்கிலில் துளை விழுகிறது. அங்கு வீசும் காற்று அத்துளையில் புகுவதால், புல்லாங்குழல் இசைக்கிறது. பனிபோல் குளிர்ந்த நீர், அருவியாகக் கொட்டுகிறது. அது எழுப்பும் இன்னிசை, தொகுதியான முழவுகள் எழுப்பும் இன்னிசை போல் உள்ளது. கூட்டமான கலைமான்களின் குரல் பாட்டு ஒலியாக ஒலிக்கின்றது. பூக்கள் நிரம்பிய மலைச்சாரலில் வண்டுகள் செய்யும் ஒலி யாழ் ஒலியாக இசை கூட்டுகிறது. இந்த இன்னிசைச் சங்கமத்தைக் கேட்டு, மகிழ்ந்து, அழகு மயில் தன் கோலத்தோகையை விரித்து ஆடுகிறது.

இந்தக் கூத்தும் இசையும் கண்டும் கேட்டும் மகிழ அவையினர் வேண்டுமல்லவா? பெண் குரங்குகள் நல்ல அவையினராகத் திகழ்ந்து இவற்றைக் கண்டும் கேட்டும் மகிழ்கின்றன.

"ஆடுஅமைக் குயின்ற அவிர்துளை மருங்கின்
கோடை அவ்வளி குழலிசை ஆக,
பாடுஇன் அருவிப் பனிநீர் இன்இசை
தோடுஅமை முழவின் துதைகுரல் ஆக,
கணக்கலை இருக்கும் கடுங்குரல் தூம்பொடு,
மலைப்பூஞ் சாரல் வண்டு யாழ்ஆக,
இன்பல் இமிழ்இசை கேட்டு, கலிசிறந்து,
மந்தி நல்அவை மருள்வன நோக்க,
கழைவளர் அடுக்கத்து, இயலி ஆடுமயில்..."

- அகநானூறு: 82

குறிஞ்சியைப் பாடுவதில் கபிலருக்கு நிகர் கபிலரே!

குறிஞ்சி இன்பம்:

உலகிலுள்ள பல்லாயிரக்கணக்கான மொழிகளில் உயர்தனிச் செம்மொழியாக விளங்கும் தமிழின் தனிச்சிறப்புகளில் ஒன்று, வாழ்வியல் நெறிகளை வகுத்துக்காட்டுகிற பொருள் இலக்கணத்தைத் தன்னகத்தே கொண்டு விளங்குவதுதான். இது அகப்பொருள், புறப்பொருள் என இருவகைப்படும். காதல் வாழ்வு பற்றியதாகிய அகத்திணைகளில் ஒன்று குறிஞ்சித்திணை. "ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் கண்டு, உள்ளம் கலந்து உறவு கொள்ளும் ஒழுக்கம்" என்று குறிஞ்சித் திணைக்கு இலக்கணம் சுட்டப்படுகிறது. இனி, இத்திணை பொருந்த அமைந்த ஒரு பாடலில், அன்பின் சிறப்பினைக் காண்போம். தலைவன் தன்னுடன் கொண்டுள்ள நட்பின் சிறப்பைத் தலைவி, தன் தோழிக்குக் கூறுகிறாள் (குறுந்தொகை : 3):

"நிலத்தினும் பெரிதே; வானினும் உயர்ந்தன்று;
நீரினும் ஆர்அள வின்றே - சாரல்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு,
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே"

- தேவகுலத்தார்.

"மலைச்சாரலில், கரிய தண்டுகளை உடைய தேனடைகளத் தேனீக்கள் அமைக்கும் வளநாடனொடு கொண்ட நட்பு, நிலத்தை விடப் பெரியது; கடலைவிட ஆழ்ந்தகன்றது; வானைவிட உயர்ந்தது! நெல்லிக்கனியைத் தின்று, நீர்குடிக்கும் போது சுவை தருவதுபோல, குறிஞ்சித் திணைப் பாடல்கள் படித்தவர்க்கு, நினைக்கும்போது சுவை தருவன.

பாண்டியன் உக்கிரப்பெருவழுதியாரின் அன்பு வேண்டுகோளை ஏற்று, அகநானூற்றைத் தொகுத்த உருத்திரசன்மர், குறிஞ்சித்திணைப் பாடல்களை, இரண்டு அல்லது எட்டு என முடியும் எண்ணிக்கை கொண்ட பாடல்களாக அமைந்துள்ள நயம் ஈண்டு எண்ணி மகிழ்தற்குரியது. அடுத்த குறிஞ்சிவிழா ஆண்டு 2030.

"உருவிலே கவர்ச்சி மிக்கான்
உள்ளத்திலே யன்பு மிக்கான்
கருவிலே திருவு கொண்டான்
கலையிலே புலமை மிக்கான்
பெருமைசால் பாண்டித் தேவன்
பெருந்தகைச் சங்கக் கண்டு
பருவமா மழை போலிங்கே
பைந்தமிழ்க் குதவினானே"

தவத்திரு. கவியோகி அவர்கள்

சங்க இலக்கியத்தில் வேங்கைப்புலி, வேழம், வேங்கைமரம்

பேரா.**கஸ்தூரி இராமசாமி,**
பயிரியல் துறை (ப.நி),
யாதவர் கல்லூரி, மதுரை
கைபேசி: 9095412239.

அறிமுகம்

வேங்கைமரம், வேங்கைப்புலி, வேழம் ஆகிய இம்மூன்றும் குறிஞ்சிநிலக் கருப்பொருட்கள். 'வேங்கை' என்பது வேங்கைப் புலியையும் வேங்கைமரத்தையும் சுட்டுகின்ற பொதுப்பெயர்.

புலி X யானை

வேங்கைப்புலியும் வேழமும் ஒன்றையொன்று எதிர்த்துப் போரிடுவன. புலிக்கும் யானைக்கும் இடையே நடந்த போரினைப் பற்றிய பல குறிப்புகள் சங்க இலக்கியத்தில் உள்ளன. விலங்குகளுக்குள் பெரிய உருவங்கொண்டது யானை. நீண்ட கூர்மையான இரண்டு கொம்புகளைக் கொண்ட வலிமையான விலங்கு; ஆனாலும் தழையுண்ணி. புலியைப்போலப் பிற விலங்குகளை வேட்டையாடி உண்ணும் விலங்கல்ல. இரைதேடுவதிலோ பகிர்ந்து கொள்வதிலோ புலிக்கும் யானைக்கும் மோதல் வர வாய்ப்பில்லை. அவற்றுள் வலிமையானது எது என்ற போட்டியில் பூசல் எழ வாய்ப்பு உண்டு.

போர்க்காரணம்

வேங்கைப்புலி வேழத்தின் கன்றுகளை வேட்டையாடித் தின்னும் பழக்கமுடையது. வேழத்தின் வலிமை புலிக்குத் தெரியும். ஆனால் புலி பெரும்பாலும் வேழத்தோடு நேருக்கு நேர் மோதுவதில்லை. ஆனால் யானை கூட்டமாகத் திரியும் போது பின்தங்கிவிட்ட குட்டிகளை அல்லது தனியாக அகப்படும் குட்டிகளைப் புலி தாக்கிக் கொன்று தின்னும் இயல்புடையது. இக்காட்சிகளை விலங்கினங்களின் வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டும் தொலைக்காட்சி அலைவரிசைகளில் (Discovery Channel, Animal planet) காண முடிகிறது. தம் குட்டிகளைக் கொன்று தின்னும் புலியிடம் யானை பகை கொள்வதில் வியப்பில்லை. குட்டிகளைக் கொன்றதனால் யானை சினங்கொண்டு புலியைத் தாக்கலாம் அல்லது தம் பிடியினையும் குட்டிகளையும் காத்துக் கொள்ளும் பொருட்டு யானை தற்காப்பு நடவடிக்கையாகப் புலியைத் தாக்கி விரட்டலாம். இத்தகைய

நிகழ்வுகள் சங்க இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆக, வேழத்திற்கும் வேங்கைக்கும் பரம்பரைப் பகை நிலவி வருகிறது என்பது கண்கூடு.

புலியிடமிருந்து வேழம் தன் குட்டிகளைக் காத்து நிற்கும்படியான இருள் நிறைந்த அச்சமூட்டும் வழியில் வராதிருப்பாயாக எனத் தோழி, தலைவனிடம் கூறுவதாக ஒரு பாடல் அமைந்துள்ளது.

"குறுவரி இரும்புலி அஞ்சிக் குறுநடைக்
கன்றுடை வேழம் நின்றுகாத்து அல்கும்"

நற்.85: 4,5

நீர் இல்லாத வறண்ட குளத்தைத் துழாவிய யானையொன்று புலியிடமிருந்து தன்னுடைய பிடியைக் காத்து நிற்கும் மலைப்பக்கத்துக் காட்சியைக் குறுந்தொகைப் பாடல் சித்திரிக்கின்றது:

"..... .... நீர் இல்
வறுங்கயம் தழைஇய இலங்குமருப்பு யானை
குறும்பொறை மருங்கின் அமர்துணை தழீஇக்
கொடுவரி இரும்புலி காக்கும்
நெடுவரை மருங்கின் சுரன்..."

குறுந்.215: 3-7

இவ்வாறு குறிஞ்சி நிலத்தில் வேழமும் வேங்கைப்புலியும் சண்டையிட்ட காட்சிகளைப் புலவர்கள் கண்டிருக்கின்றனர். 'புலி கொல் யானை' என்ற தொடர் புலி கொன்ற யானை; புலியைக் கொன்ற யானை என்ற இரு பொருள்படும் என்பதைச் சங்க இலக்கியம் காட்டுகிறது. சங்க இலக்கியத்தில் புலியும் களிறும் மோதுகின்ற காட்சிகள் பல இடம் பெற்றுள்ளன. சில மோதல்களில் புலி வெல்கிறது. சில மோதல்களில் யானைக்கே வெற்றி கிடைக்கின்றது. பெரும்பாலும் தலைவன் தலைவியைச் சந்திக்க வருகின்ற காட்டுவழி அச்சம் பொருந்தியது என்பதைக் காட்ட வேழமும் வேங்கையும் சண்டையிடும் காட்சிகளைச் சித்திரித்துள்ளனர்.

யானையை வென்ற புலி

யானையைப் புலி தாக்கிக் கொன்றதைப் புலவர்கள் பல்வேறு நிலைகளில் விளக்கியுள்ளனர்.

தொடர்ச்சி அடுத்த இதழில்

சங்கச் செய்திகள்

02.10.2018 அன்று மதுரை மாவட்டம் மக்கள் பாதை மற்றும் உலகத் தமிழ்ச் சங்கம் இணைந்து நடத்திய அனைத்துக் கல்லூரிகளுக் கிடையேயான கவிதைப் போட்டியில் முதுகலை முதலாமாண்டு மாணவி த.கார்த்திகா முதலிடமும், முதுகலை இரண்டாமாண்டு மாணவி பா.ஸ்ரீதேவி இரண்டாமிடமும் பெற்றனர். சமையல் போட்டியில் முதுகலை இரண்டாமாண்டு மாணவியர் செண்பகக் கனிமொழி இரண்டாமிடமும், ஜெ.செல்வராணி மூன்றாமிடமும் பெற்றனர்.

03.10.2018 அன்று முற்பகல் 11 மணியளவில் ம.பொ.சி அவர்களின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெற்றது. முதுகலை இரண்டாமாண்டு மாணவி அ.அய்யலெட்சுமி அவர்கள் தனது உரையில், "ம.பொ.சி என்று தமிழ் நெஞ்சங்களால் போற்றிப் புகழப்படும் மயிலாப்பூர் பொன்னுசாமி சிவஞானம் அவர்கள் தமிழக வரலாற்று நாயகர்களில் ஒருவர். அவரது இளமைக்காலம் வறுமைப் பிடியில் சிக்கித் தவித்தபோது, 'உணவா?' 'புத்தகமா?' என்ற கேள்வி எழுந்த போது பட்டினி கிடந்து புத்தகத்தை வாங்கிப் படித்தவர். தமிழ் மீது கொண்ட பற்றாலும் வாசிப்புப் பழக்கத்தாலும் பின்னாளில் பல்வேறு பல்கலைக் கழகங்களில் ஆட்சிக்குழு உறுப்பினராகப் பதவி வகிக்குமளவிற்கு உயர்ந்தவர். தமிழ் இலக்கிய ஆராய்ச்சியாக இருந்தபோதிலும் முனைவர் பட்டம் எழுதி வழங்கும் கட்டுரைகள் ஆங்கிலத்தில்தான் எழுதித்தரப்பட வேண்டும் என்ற நிலை மாறித் தமிழிலேயும் எழுதலாம் எனும் நிலைக்கு வழிவகை கண்டவர் ம.பொ.சி. சென்னையை ஆந்திர மாநிலத்திற்குத் தலைநகராக்க வேண்டும் என்ற ஆந்திர மாநிலக் கிளர்ச்சியின் போது 'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்' என்ற முழக்கத்துடன் தனது போராட்டங்களை தீவிரமாக முன்னெடுத்து, தமிழகத்தின் தலைநகரான சென்னையை மீட்டுக் கொடுத்தவர். பத்மஸ்ரீ, கலைமாமணி, தமிழ்ப் பேரவைச் செம்மல், சிலம்புச்செல்வர் முதலிய பட்டங்களைப் பெற்ற பெருமைக்குரியவர். இதழியல் துறையில் 58 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவம் கொண்டவர். அச்சுக் கோர்க்கும் தொழிலிருந்து இதழாசிரியர் பொறுப்புவரை பல்வேறு நிலைகளில் பணிபுரிந்து தம் அறிவால் உயர்ந்தவர். "கிராமணியின் பேச்சு பெரிய காவியம் போன்றது. மாதுளம் பழத்திலுள்ள ரத்தினக் கற்களைப் போல் கட்டுக்கோப்புடனும், ஒழுங்காகவும் முத்துக்கள் எப்படி அடுக்கப்பட்டிருக்கின்றனவோ அப்படி ம.பொ.சி.யின் பேச்சில் சொற்கள் கோர்வையாகவும் அழகாகவும் அமைகின்றன. அப்படிப் பேச அவர் ஒருவரால் தான் முடியும்" என்று மூதறிஞர் ராஜாஜியின் பாராட்டினைப்

பெற்றவர் என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக ம.பொ.சி அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

03.10.2018 அன்று முற்பகல் 11:30 மணியளவில் செல்வக் கேசவராய முதலியார் அவர்களின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெற்றது. முதுகலை இரண்டாமாண்டு மாணவி ச.சரண்யா அவர்கள் தனது உரையில், "செல்வக் கேசவராய முதலியார் தமிழ், ஆங்கிலம் மட்டுமின்றித் தெலுங்கிலும் சிறந்த புலமையாளராகத் திகழ்ந்தார். மாணவர்களுக்கு மிகவும் இனிமையாகவும், பல்வேறு மொழிகளோடு ஒப்பிட்டும் தமிழின் இனிமையை விளக்கும் முறையில் பாடம் நடத்திய தால் இவர் மேல் அனைத்து மாணவர்களும் பெருமதிப்புக் கொண்டனர். 15 நூல்களை இயற்றியும், பல்வேறு நூல்களைப் பதிப்பித்தும் தமிழ்ப் பணியாற்றியவர். தமிழறிஞர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளை போன்ற தலைசிறந்த மாணவர்களை உருவாக்கியவர்" என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக செல்வக் கேசவராய முதலியார் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

04.10.2018 அன்று தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் நடத்திய மாநில அளவிலான கவிதைப்போட்டியில் செந்தமிழ்க் கல்லூரி முதுகலை முதலாமாண்டு மாணவி த.கார்த்திகா முதலிடம் வகித்து ரூபாய் 15,000 ரொக்கப் பரிசினை சென்னையில் நடைபெற்ற விழாவில் **தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் மாண்புமிகு பா.பாண்டியராஜன்** அவர்களிடமிருந்து பெற்றார்.

08.10.2018 அன்று முற்பகல் 10:30 மணியளவில் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரனாரின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெற்றது. முதுகலை முதலாமாண்டு மாணவி பா.பாண்டிச்செல்வி தனது உரையில், "பட்டுக்கோட்டையார் மக்களின் வாழ்வியல் நிலையை எளிய, இனிய தமிழில் வழங்கி 'மக்கள் கவிஞர்' எனப் போற்றப்பட்டவர். சிறந்த தமிழறிஞர்; சிந்தனையாளர்; பாடலாசிரியர். காலத்தை வென்ற கவிஞர். தனது பாடல்களில் உருவகங்களைக் காட்டாமல் உணர்ச்சிகளைக் காட்டியவர். மகாகவி பாரதியாருக்குப் பிறகு சமூக அக்கறை மிகுந்த தனது பாடல்களால் மக்கள் மனதில் வெள்ளமெனப் பாய்ந்தவர் அவர். தனது வறுமையின் பொருட்டு விவசாயம், வியாபாரம், நாடகநடிப்பு, டிரைவிங், உப்பளத்தொழில் என எண்ணற்ற தொழில்களையும்

வேலைகளையும் செய்தவர். பாவேந்தர் பாரதிதாசனிடம் தமிழ் கற்றவர். பொதுவுடைமைக் கருத்தியலைத் தீவிரமாக பரப்பியவர். மூடநம்பிக்கை களுக்கு எதிரான அரசியல் விழிப்புணர்வுக் கருத்துக்களை மக்களிடம் கொண்டு செல்ல திரையிசையைப் பயன்படுத்தியவர். ஒரு முறை 'ஜனசக்தி' பத்திரிகை ஆசிரியர், கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்திடம், 'பெரிய கவிஞர்களான கம்பன், இளங்கோ, பாரதி போன்றவர்களே பெயரைச் சிறிதாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் ஏன் இவ்வளவு பெரிய பெயரை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?' என்று கேட்டதற்கு 'அவர்கள் பெரிய கவிஞர்கள். நான் சின்னக்கவிஞன். பெயராவது பெரிதாக இருக்கட்டுமே?' என்று பதிலளித்தார் பட்டுக் கோட்டையார் அவர்கள். தன்னடக்கமாக அவர் அப்படிச் சொல்லி யிருந்தாலும், மானுட சமூகத்தின் மீது அவர் கொண்ட நேசத்தாலும், அக்கறையாலும் மக்களின் இதயத்தில் என்றென்றும் நிறைந்திருப்பவர். அவரது பாடல்களைக் கேட்பதின் வாயிலாகவும் நினைவுகூர்வதின் வாயிலாகவும் இன்றைய நாளை நாம் மகத்துவமானதாக்குவோம்" என்று கூறினார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாகப் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரனாரின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

10.10.2018 அன்று முற்பகல் 10:30 மணியளவில் மு.வரதராசனாரின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெற்றது. முதுகலை முதலாமாண்டு மாணவி த.தோகைலெட்சுமி தனது உரையில், "நன்னூல் கூறும் நல்லாசிரியருக்கான இலக்கணம் அத்தனைக்கும் இலக்கணங் களுக்கும் முற்றிலும் பொருத்தமான ஒரு பெருந்தகை மு.வரதராசனார் ஆவார். 'பாடப் புத்தகத்தை ஒழுங்காகக் கற்பிப்பவன் வாங்கும் சம்பளத்துக்கு மட்டுமே உண்மை பேணுபவன்; சமுதாய உணர்வு முதலான உணர்வுகளையும் சேர்ந்து இளைஞனை சமுதாய உணர்வுடையவனாக ஆக்குவோனே நல்லாசிரியன்' என்று நல்லாசிரியருக்கு இலக்கணம் கூறி அதற்கு முன்னுதாரணமாகவும் வாழ்ந்தவர் மு.வ.பாடத்திற்கு அப்பால் ஒரு புரவலராய், உற்றுழி உதவும் நண்பராய், வழிவகுத்து நடத்தும் தந்தையாய், தாயாய் விளங்கியவர் மு.வ.ஆவார். தமிழ் இலக்கியக் கட்டுரைகள், சிறுகதை, புதினம் மட்டுமல்லாது ஆராய்ச்சி நூல்களின் மூலம் சமுதாயத்தைச் சீர்தூக்கிப் பார்த்தவர். சென்னை பச்சையப்பன் கல்லூரி, சென்னை பல்கலைக்கழகம் போன்ற பிரசித்தி பெற்ற கல்விப் பட்டறைகளின் தமிழ்த் துறைத் தலைவராகவும், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும் பணியாற்றி, தமிழுக்கே உரிய சிறப்புகளைத் தன்

படைப்புகள் மூலம் பறைசாற்றிய பேராசிரியர். கம்பராமாயணத்தின் தனிச் சிறப்புகளைத் தனக்கே உரிய பேச்சுவழக்கில் எடுத்துரைத்தவர். வள்ளுவமும் காந்தியமும் அவருக்குப் பிடித்தமானவையாகும். தூய்மையான வாழ்க்கையில் பொதிந்துள்ள அறநெறிகளை அகிலத்துக்கு வழங்கியவர். திருவாசக வரிகளையும் தாயுமானவர் பாடல்களையும் தன்னகத்தே பதித்துக்கொண்டு தன்னைப் பண்படுத்திக் கொண்டதோடு, பெரியோர், சிறியோர், சான்றோர், சமூகத்தோர் போன்றோரிடம் வெளிப் படுத்த வேண்டிய நாகரிகப் பண்புகளையும் மரியாதையையும் பறைசாற்றியவர். சங்க இலக்கிய நூல்களையும் சிலப்பதிகாரச் சிறப்பையும் மனம் குளிர வெளிப்படையாகப் போற்றியவர் மு.வ.தாம் மறையும்வரை தமிழுக்காகவே வாழ்ந்த அவரைக் காலம் கடத்திச் சென்றாலும், உலகம் முழுக்க வியாபித்திருக்கும் அவருடைய படைப்புகள், வளரும் தமிழ் இலக்கியச் சமூகத்திற்கான உரமாக இருந்து தமிழைத் தழைத்தோங்கச் செய்யும் என்பதில் ஐயமில்லை" என்று கூறினார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக மு.வ.அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

14.10.2018 அன்று இளந்தமிழர் இலக்கியப் பேரவை தென்மண்டலம் நடத்திய கட்டுரைப் போட்டியில் முதுகலை இரண்டாமாண்டு மாணவி பா.ஸ்ரீதேவி முதலிடமும், கவிதைப் போட்டியில் முதுகலை இரண்டாமாண்டு மாணவி ஜெ.செல்வராணி இரண்டாமிடமும், முதுகலை முதலாமாண்டு மாணவி த.கார்த்திகா மூன்றாமிடமும் பெற்று, ரொக்கப்பரிசு முறையே ரூபாய் 500, 300 மற்றும் 200 பெற்றனர்.

29.10.2018 அன்று மதுரை காமராசர் பல்கலைக்கழகம், பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் அறக்கட்டளை, நடத்திய அனைத்துக் கல்லூரி மாணவர்களுக்கிடையேயான பேச்சுப்போட்டியில் முதுகலை முதலாமாண்டு மாணவி த.கார்த்திகா முதலிடமும் இளங்கலை முதலாமாண்டு மாணவி க.பிரியரஞ்சனி மூன்றாமிடமும் பெற்று ரொக்கப்பரிசு முறையே ரூபாய் 2000, 1000 பெற்றனர். கவிதைப் போட்டியில் செந்தமிழ்க் கல்லூரி முதுகலை முதலாமாண்டு மாணவி த.கார்த்திகா முதலிடம் பெற்று ரொக்கப்பரிசு ரூபாய் 2000 பெற்றார். கட்டுரைப் போட்டியில் முதுகலை இரண்டாமாண்டு மாணவி ஜெ.செல்வராணி இரண்டாமிடம் பெற்று ரொக்கப்பரிசு ரூபாய் 1500 பெற்றார்.

திசம்பர் திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்

வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவர் (டிச.2)

கவியரசு முடியரசன் (டிச.3)

ந.பிச்சமூர்த்தி (டிச.4)

கல்கி (டிச.5)

கலாநிதி கைலாசபதி (டிச.6)

நா.பார்த்தசாரதி (டிச.13)

நாவலர் சோமசுந்தர பாரதியார் (டிச.14)

சு.செல்லப்பா (டிச.18)

கி.ஆ.பெ விசுவநாதனார் (டிச.19)

பா.வே.மாணிக்க நாயக்கர் (டிச.25)

ராஜாஜி (டிச.25)

மன்னர் பாசுகர சேதுபதி (டிச.27)

தமிழண்ணல் (டிச.29)

தொ.மு.சி.ரகுநாதன் 1923-2001 (டிச.31)

பதிப்பாசிரியர்: **பேரா. இரா.சதாசிவம்**

ஆசிரியர் குழு

முதுமுனைவர் திரு. **இரா.இளங்குமரனார்**

முனைவர் திரு. **அ.அ.மணவாளன்**
முனைவர் திரு. **தி.முருகரத்தனம்**
முனைவர் திரு. **இராம.சுந்தரம்**
முனைவர் திரு. **கு.வெ.பாலசுப்பிரமணியன்**
முனைவர் திரு. **ம.திருமலை**
முனைவர் திரு. **மு.மணிவேல்**
முனைவர் திரு. **இ.மறைமலை**
முனைவர் திரு. **ம.பெ.சீனிவாசன்**
முனைவர் திரு. **செ.கந்தசாமி**
முனைவர் திரு. **இ.கி.ராமசாமி**
முனைவர் திரு. **பெ.சுயம்பு**
முனைவர் திரு **உ.கருப்பத்தேவன்**

RNI Regd. No.5507/56 Postal Registration Number TN/MA/130/2017-19
Date of Publication 20th of Every Month
Posted at Madurai BPC on 25th of Every Month

மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத் தேர்வு அறிவிப்பு

மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தால் 50 ஆண்டுகளுக்கும் மேலாக ஒவ்வொரு ஆண்டும் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புப் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு அரசுப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறவும், கூடுதல் மதிப்பெண்கள் பெறவும் வழிகாட்டியாக தமிழ்பாடம் மாதிரி தேர்வு சங்கத்தால் நடத்தப்பட்டு வருகின்றது.

நடப்பாண்டு முதல் மாநில பாடத்திட்டத்தில் கூடுதலாக பதினொன்றாம் வகுப்பிற்கும், மத்திய பாடத்திட்டத்தில் பத்தாம் வகுப்பிற்கும் மாதிரி தேர்வு நடத்துவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்தேர்வில் கலந்து கொள்ளும் மாணவ / மாணவியர்களுக்கு சங்கத்தால் சான்றிதழும் அதிக மதிப்பெண் பெறுபவர்களுக்குப் பரிசும் வழங்கப்பட்டு வருகிறது. இச்சான்றிதழ் மாணவர்களுக்கு எதிர்காலத்தில் பெரும் பயனுள்ளதாக இருக்கும். இந்த ஆண்டிற்கான சங்க தேர்வுகள் மாநில மற்றும் மத்திய பாடத்திட்டத்தில் பத்தாம் வகுப்பிற்கு 19.01.2019-ஆம் நாளன்றும், பதினொன்றாம் வகுப்பிற்கு 05.01.2019-ஆம் நாளன்றும் மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பிற்கு 05.01.2019-ஆம் நாளன்றும் நடைபெறவுள்ளது. மாணவர்கள் அனைவரும் இத்தேர்வில் கலந்துகொண்டு பயன்பெற அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

அனுப்புநர்,	From
செயலாளர் நான்காம் தமிழ்ச் சங்கம் 54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை - 625 001.	**THE SECRETARY** The Fourth Tamilsangam 54, Tamil Sangam Road, Madurai - 625 001, TAMILNADU, INDIA

பெறுநர்/To,

Book Post

வெளியிடுபவர்: வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி செயலாளர்
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை - 1 ✆ 0452 - 2343707
பதிப்பாசிரியர்: இரா.சதாசிவம், 2/861, இராசராசன் தெரு, மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: செந்தமிழ் அச்சகம், 54, தமிழ்ச்சங்கச் சாலை, மதுரை- 1